Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 2 (03.07.2003) வியாழக்கிழமை இதழ்: 274

யாழ்.மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி

95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)

யாழ்ப்பாண்ம். 021 - 2226144

24 மணி நேர சேவைக்கு 077-6038505

(சி-1096)

## புலிகளை வலிந்து போருக்கு இழுக்கும் சீண்டல் நடவடிக்கைகளில் படையினர்!

### 'விடுதலைப் புலிகள்' அதிகாரபூர்வ ஏடு கண்டனம்

அரச படைகளின் அண்மைக்கால போர்நிறுத்த மீறல் சம்பவங்கள், புலிகளைச் சீண்டிச் சண்டைக்கிழுக்கும் உள்நோக்கத்துடன் செய்யப்படுவதாக - விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான, 'விடுதலைப் புலிகள்' இதழ் குற்றஞ்சாட்டியுள்ளது.

சமாதானச் சூழலைக் குலைத்துப் போர்ச்சூழலை உண்டுபண்ண, சிங்களப் பேரினவாதிகள் விரும்புவதாகவும், அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒருபுறம் போர்நிறுத்த மீறல்களை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தூண்டியும், தானே முன்னின்று நடாத்தியும் வருகின்றார். மறுபுறம், இத்தகைய மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக, எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காமல், வெறும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தினை இந்தியா உன்னிப்பாக கவனிப்பு

### டக்ளஸிடம் இந்திய பாதுகாப்பு ஆலோசகர்

இலங்கை விவகாரத்தில் - இந்தியா நெருக்கமான கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாக, இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா, தன்னைச் சந்தித்த ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்ததாக, அக்கட்சியின் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த டக்ளஸ் தேவானந்தா, இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது,

(10 ஆம் பக்கம் பார்க்க)


# யாழ். மாவட்ட புனரமைப்புப் பணியில் பல கோடிக்கணக்கான ரூபா மோசடி!

## கணக்காய்வு அறிக்கையில் அம்பலம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில், அரசினால் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு வேலைகளில், மிகப் பிரமாண்டமான ஊழல்கள் நடைபெற்றிருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது.**

**கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டுவரை நடந்த இப்பாரிய நிதி மோசடி பற்றி, தற்போதைய அரச அதிபர் - புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.**



Telephone

Government Agent/District Secretary 021-2222236

My No.

Fax 021-2222355

Your No.

E.Mail: gajaffna@sltnet.lk

District Secretariat, Jaffna.

Date 22.04.2003

1720

Secretary
Ministry of Rehabilitation Reconstruction
and Refugees

Decision taken at the meeting held on 20.03.2003 in Parliament Committee Room No. 2

As requested by the Hon'ble Minister at the above mentioned meeting I submit a report

அரச அதிபரின் கடிதத்தின் முதற் பக்கம்.

மேற்படி நிதிமோசடி தொடர்பான கணக்காய்வு அறிக்கையின்படி, அன்றைய அரச அதிபர் சண்முகநாதனும், பொறியியலாளர் கிரிதரனும் கூட்டாக இணைந்தே, இந்த மோசடி வேலையைச் செய்தமை தெளிவாகியுள்ளது.

முதற்கட்டமாக, அக்காலப்பகுதியில் செய்யப்பட்ட 14 புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேற்படி மோசடி தொடர்பான பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

அக்காலப்பகுதியில், செயற்திட்டம் தயாரிப்பவரும், மதிப்பீடு செய்பவராகவும், BOQQ தயாரிப்பவராகவும, இவ்வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்பவராகவும் தனி ஒருவர்தான் செயற்பட்டிருக்கிறார். அவர்தான் 'றான்' பொறியியலாளர் கிரிதரன். இவர், அத்துடன் நிற்கவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட பிரதிநிதி புலிகளை சந்திக்க திட்டம்

(கொழும்பு)

கொழும்பில் தற்போது தங்கியுள்ள நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் வெஸ்பேர்க், அடுத்த சில தினங்களில் விடுதலைப் புலிகளுடன் சந்திப்பொன்றை நடத்தலாம் என, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெஸ்பேர்க் - கொழும்பில் அரச மட்டத் தலைவர்கள் பலரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பேச்சுக்களை மீள ஆரம்பிக்க, உறுதியான தளம் ஒன்றை அமைப்பதே, இவரின் இந்தச் சந்திப்பின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை - ஊடகங்களில் வரும் தகவல்களுக்கும் உண்மையான நிலைவரத்துக்குமிடையே பெரிய இடைவெளியிருப்பதாக, கொழும்பில் தற்போது தற்காலிக நோர்வேக்கான தூதுவராகக் கடமையாற்றும் வெஸ்பேர்க் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஹெலிகள் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று, யாழ்.குடாநாட்டின் வான் பரப்பில், ஹெலிகொப்ரர்கள் பல தடவைகள் தாழ்வாகப் பறந்து வட்டமிட்டன.

விமானப் படையின் இரு ஹெலிகொப்ரர்களே இவ்வாறு நேற்றுப் பகல்வேளை முழுவதும் அடிக்கடி வான் பரப்பினுள் தாழ்வாகப் பறந்து வட்டமிட்டன.

## அரசு அமைதி முயற்சியூடாகவே இறுதித்தீர்வினை எட்டவேண்டும்!

### நெதர்லாந்து வெளியுறவு அதிகாரி தெரிவிப்பு

அரசாங்கம் அமைதி முயற்சிகளினூடாகவே இறுதித்தீர்வை எட்ட வேண்டுமென்று, நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சின் தென்னாசியப் பிரிவுக்கான பணிப்பாளர் வில்பிரட் மோர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உதவி வழங்கும் மாநாட்டில், சர்வதேசம் வழங்கிய நிதி, இனப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வழியில் செலவிடப்படுகின்றதா என்பதில் கவனம் செலுத்தப்படும்.

இலங்கையில், அமைதி முயற்சிகள் கட்டியெழுப்பப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. சாதாரணமாகக் கட்டடம் கட்டுவதோடு எமது பணி நிற்காது. அதனூடாகப் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதில் கவனம் செலுத்தப்படும்.

வைத்தியசாலைகள், பாடசாலைகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றியும் கவனிக்கவுள்ளோம்.

இறுதித்தீர்வு அமைதி முயற்சி மூலம் தாமதமின்றிப் பெறப்பட வேண்டுமென்பதில் சர்வதேச சமூகம் ஆர்வமாக உள்ளது.

நோர்வே - அமைதிப்பணியில் நல்ல பங்களிப்பை வழங்கிவருகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

EXPO Aviation

பயணிகள் அதிகரிப்புக் காரணமாக எமது நிறுவனத்தில் இன்றுமுதல் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை மேலதிக விமானசேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு

021 - 222 3891, 071 - 234 8888, 071 - 2349999

(சி-1139)

## மீனவர்கள் மீது மீண்டும் படையினர் கடும் சோதனை

யாழ்.நகரக் கரையோரப் பகுதியூடாக கடற்தொழிலுக்குச் செல்பவர்களை, படையினர் கடுமையாகப் சோதனை செய்து வருகின்றனர்.

குருநகர், பாஷையூர் ஆகிய இறங்குதுறைகளினூடாக கடற்தொழிலுக்குச் செல்பவர்களையே, படையினர் சோதனைக்குட்படுத்தி வருகின்றனர்.

மீனவர்கள், இவ்வாறு சோதனையை முடித்துக்கொண்டு, கடலுக்குள் சென்ற பின்னரும், நடுக்கடலில் - படகினையும், படகினுள் இருப்பவர்களையும் கடற்படையினர் சோதனைக்குட்படுத்துகின்றனர்.

இதனால் மீனவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

## ஈராக்கிற்கு அமைதிப்படை; இலங்கைக்கு விருப்பமாம்!

### வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

இருபது வருடங்களுக்கும் மேலான யுத்தத்தின் பின்னர், சமாதான முன்னெடுப்புக்கள் துரிதமாக இடம்பெற்றுவரும் இக்காலப் பகுதியில், தமது படைகளை அமைதிகாப்புப் பணிகளில் ஈடுபட ஈராக் நாட்டிற்கு அனுப்ப விருப்பம் இருப்பதாகவும், இதற்கான வேண்டுகோள் கிடைக்கும் பட்சத்தில், தமது படைகளை அனுப்ப வாய்ப்பிருப்பதாகவும் வெளிநாட்டு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், சிவில் யுத்தம் கடுமையாக இருந்ததனால், இராணுவத்தை ஏனைய நாடுகளின் அமைதிப்பணிக்கு அனுப்பமுடியாதிருந்ததாகவும், தற்போது நாட்டில் சமாதானம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வாளரை காணவில்லை!

மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவின் முன்னாள் கோப்ரல் ஒருவரைக் கடந்த மாதம் 23 ஆம் திகதியிலிருந்து காணவில்லை என்று, மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சனத்துக்கான காசு, உப்பிடி பொக்கற், பொக்கற்றத்தான் தேங்கிக் கிடக்குது பார்...!

# யாழ். மாவட்ட புனர்வாழ்வுப் பணிகளில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் குறித்த அரச அதிபரின் கடிதம்!

*மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம். 22-04-2003*

*செயலர்,*
*புனர்வாழ்வு, புனரமைச்சு மற்றும் அகதிகள் அமைச்சு,*
*பாராளுமன்ற குழுநிலை அறை இல.2 இல்*

**20-03-2003 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு.**

மேற்குறிப்பிட்ட கூட்டத்தில், கௌரவ அமைச்சரா[illegible]ணிக்கப்பட்டதற்கமைய, RRAN இனாலும் அகதிகள் அமைச்சினாலும் 2000 - 2002 காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட பொதுநிர்மாண வேலைகள் பற்றிய அறிக்கையை, இத்தால் சமர்ப்பிக்கின்றேன். உள்ளகக் கணக்காய்வாளர்கள் 01.12.2002 இல் என்னிடம் சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாக்கொண்டதே இது. அந்த அறிக்கையின் பிரதியொன்றும் உங்களது பாவனைக்காக, இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது. தயவுசெய்து இந்த அறிக்கையை கௌரவ அமைச்சர் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக, அவரிடம் சமர்ப்பிக்கவும்.

எந்த ஒரு அமைச்சோ, திணைக்களமோ கேள்விகளைக் கோரும்போது, அவைகளை அளித்து நிர்மாண வேலைகளைச் செயற்படுத்தும்போது, ஒப்பந்தம் கைச்சாத்திடும்போத' முற்பணம் கொடுக்கும்போது, பகுதிக்கொடுப்பனவுகள் செய்யும்போது, இறுதிக்கொடுப்பனவு செய்யும்போது எவ்வகையில் இவைகள் செய்யப்படவேண்டும் என்று வழிகாட்ட, இறுக்கமான நிதியியல் விதிகளும், அதைத்தொடர்ந்து வந்த நிதியியல் சுற்றறிக்கைகளும் இருக்கின்றன. ஆனால், உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கையின்படியும், எனது தனிப்பட்ட பார்வையிலும் RRAN மற்றும் அகதிகள் அமைச்சிடமிருந்து பொது ஒப்பந்த வேலைகளுக்கென பெறப்பட்ட நிதிகளைக் கையாள்வதில் - அன்றைய அரச அதிபர் திரு.மு.சண்முகநாதன் எந்த ஒரு நடைமுறைகளையும் பின்பற்றவில்லையெனத் தெரியவருகிறது. இந்த நோக்கத்திற்காக அப்படிச் செய்யப்பட்ட வேலைகளுள் இப்போதைக்கு 14 வேலைகளைத் தெரிந்தெடுத்திருக்கிறேன். இணைப்பு 1 ஐச் சுருக்க விளக்கமாக இது தொடர்பாக இணைத்திருக்கிறேன்.

ஒவ்வொரு வேலைகளினதும் குறைபாடுகள் எழுத்துவடிவ தொகுப்பாக கீழே தரப்பட்டுள்ளன.

A) ஒப்பந்தகாரர் -
**நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கம்.**

**1. திருநெல்வேலி மாதிரி சந்தை கட்டம் 11**

இந்தச் சந்தையின் உரிமையாளர், நல்லூர் பிரதேசசபையாகும். ஆனால், இப்பிரதேச சபை முகாமையாளர்களிடம் இச்சந்தை நிர்மாணம் தொடர்பான ஆவணங்கள் எதுவுமே இல்லை. அரச அதிபருக்கும் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்திற்குமிடையே ஒப்பந்தம் செய்யப்பட்டதினம் 16.07.2001. ஆனால், எத்திகதியில இவ்வேலைகள் நிறைவேற்றி முடிக்கப்பட வேண்டுமென்றோ, அல்லது அதற்குரிய வரைபடமோ இச்செயலகத்திலோ அல்லது ஒப்பந்தகாரரிடத்திலோ இருக்கவில்லை.

ஒப்பந்த தொகை ரூபா 8,516,542-26. 31.12.2002. அன்று செய்துமுடிக்கப்பட்ட வேலையின் மதிப்பீடு, ரூபா 1.9 மில்லியன். ஆனால், 18.08.2001 அன்று இதற்கென முற்பணமாக ரூபா 2.0 மில்லியன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு ரூபா 2.0 மில்லியன் 10.05.2002 அன்று கொடுக்கப்பட்டு, மொத்தமாக ரூபா 4,000,000.00 கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், இந்த முற்பணத்திற்கான கணக்குகள் முடிக்கப்படாதநிலையில், 19.02.2002 அன்று ஒப்பந்தகாரருக்கு ரூபா 3,216,965-97 பகுதிக்கொடுப்பனவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டடம் முடிவடையா நிலையில் இருக்கிறது. ஒப்பந்தகாரரோ - இவ்வேலையைத் தொடர்வதற்கோ, இதை முடிப்பதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கிறாரில்லை. இவர், ப.நோ.கூ. சங்கத்திடம் மிகுதிப் பணம் எதுவும் இல்லை எனவும், இப்பணத்தை - உப ஒப்பந்தகாரராயிருந்த திரு.P.கிரிதரன் (அப்போது RRAN இல் இணைந்திருந்த ஆலோசக பொறியியலாளர்), அனைத்துப் பணத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டார் எனவும் எனக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார்.

**2. முதியோர் இல்லம் கைதடி**

ஒப்பந்தகாரர் - நல்லூர் ப.நோ.கூ. சங்கம். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது - 16.11.2000 இல். எப்போது வேலை முடிக்கப்படவேண்டுமென்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ஒப்பந்தம் செயற்படுத்தப்படவேண்டிய இடம் (கட்டடம்), நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் தொழிற்படு பிரதேசத்திற்கு வெளியேயுள்ளது (10 Km தூரம்). ஒப்பந்தத்தொகை ரூபா 3,243,312 - 47. ஒப்பந்தத் தொகை ரூபா 3,243,312 - 47 என்ற போதிலும், ரூபா 9,650,000.00 முற்பணமாக நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒப்பந்தத் தொகையிலும் மிக அதிகமானதாகும்.

முற்பணத் தொகை கொடுக்கப்பட்ட விபரம்:

19-10-2001 ரூபா - 4,000,000.00
17-11-2001 ரூபா - 2,750,000.00
19-11-2001 ரூபா - 2,900,000.00

எனது பணிப்பின்பேரில், தலைமைப் பொறியியலாளர் (கட்டடங்கள்) செய்து முடிக்கபட்ட வேலையை மதிப்பீடு செய்தார். அவருடைய அறிக்கையின்படி செய்துமுடிக்கப்பட்ட வேலையின்பெறுமதி ரூபா 2,000,000.00

**3. ஆயுர்வேத மருத்துவமனை கைதடி**

இதற்கு இரண்டு ஒப்பந்தங்கள் உண்டு. ஒப்பந்தத் திகதிகள் 31-08-2001 மற்றும் 16-11-2001. ஒப்பந்தகாரர் நல்லூர் ப.நோ.கூ.சங்கம். இந்த வேலைத்தளமும் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் செயற்படு பிரதேசத்திற்கு வெளியேதான் உள்ளது.

ஒப்பந்தத் தொகைள்

1 ரூபா - 1,881,154-77
2 ரூபா - 12,260,154-27
ரூபா - 14,141,390-04

அரச அதிபர்கள் ரூபா 10.0 மில்லியனுக்குட்பட்ட தொகைக்கு கையெழுத்திட அதிகாரம் உண்டெனினும், இந்த அரசாங்க அதிபரோ, அமைச்சின் செயலாளரான தலைமைக் கணக்குகள் அலுவலரின் அனுமதி இல்லாமலே கையொப்பமிட்டிருக்கிறார். ஒப்பந்தகாரருக்கு 4 தடவைகள் முற்பணங்களாக மொத்தம் ரூபா 8,620,000 வழங்கப்பட்டிருக்கிறது.

03-09-2001 ரூபா - 1,500,000.00
19-11-2001 ரூபா - 120,000.00
19-11-2001 ரூபா - 5,000,000.00
20-01-2002 ரூபா - 2,000,00000

இந்த முற்பணங்களைத் தீர்த்துவைக்காமலேயே, ரூபா 685,473-60 பகுதிக் கொடுப்பனவாக 19-02-2002 அன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியியலாளரின் (கட்டடம்) அறிக்கையின்படி, முடிந்த வேலையின் மதிப்பு ரூபா 2,000,000.00 ஆகும். ஒப்பந்தகாரரால் செய்யப்பட்டவேலை தரம் குறைந்தது என பொறியியலாளர் குழு ஒன்று இனம் கண்டிருக்கிறது. இதனால் வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்தியர், வைத்தியசாலையைத் தற்போது இயக்கமுடியாத நிலையில் இருக்கிறார்.

**4. சாவகச்சேரி சந்தை**

ஒப்பந்தகாரர் - நல்லூர் ப.நோ.கூ.சங்கம். வேலைத்தளம் ப.நோ.கூ.சங்கத்தின் செயற்படு எல்லைக்கு வெளியே 15 Km தூரத்தில் இருக்கிறது. இரண்டு ஒப்பந்தங்கள் உண்டு.

1. 15.03.2002 இல் கைச்சாத்தாகியது. தொகை ரூபா 973,997-80.
2. ஒப்பந்த திகதி தெரியாது. ரூபா 8,017,903-52.

2 ஆவது ஒப்பந்தத்திற்கு மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,017,903-52 என்ற போதிலும், ஒப்பந்தம் ரூபா 10.0 மில்லியனுக்கு கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத் தொகைகளுக்கும் மிக மேலதிகமாக முற்பணமாக ரூபா13.0 மில்லியன் கொடுக்கப்பட்டிருக்கிறது

கொடுப்பனவுகள்

14-03-2002 ரூபா - 8,00,000.00
19-06-2002 ரூபா - 3,00,000.00
09-08-2002 ரூபா - 2,000,000.00

எமக்கு திருப்பிச் செலுத்தவேண்டிய முற்பணம் ரூபா 5.8 மில்லியன் என்பதுடன், செய்யப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 2.0 மில்லியன் மட்டுமே.

**5. கொக்குவில் சந்தை**

ஒப்பந்தத் திகதி - 31-01-2001

மதிக்கப்பட்ட மொத்தக் கிரயம் - ரூபா 13,523,623 -78. ரூபா 3.0 மில்லியனுக்கு மட்டுமே ஒப்பந்த ஆவணம் இருக்கிறது. ஆனால், பின்வரும் அடிப்படையில் ரூபா 5,080,000.00 முற்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

31-02-2001 ரூபா - 1,000,000.00
03-09-2001 ரூபா - 2,000,000.00
17-01-2002 ரூபா - 2,080,000.00

திருப்பித்தரவேண்டிய முற்பணம் ரூபா 2,000,000.00. செய்யப்பட்டிருக்கும் வேலை இன்னமும் தலைமை பொறியியலாளரினால் (கட்டடம்) இன்னமும் மதிப்பிடப்படவில்லை.

**6. அரச மருத்துவமனை சாவகச்சேரி**

ஒப்பந்தகாரர் - நல்லூர் ப.நோ,கூ.சங்கம். ஒப்பந்தம் கைச்சாத்தாகிய திகதி - 15-03-2002.

இந்த இடமும் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் செயற்படு எல்லைக்கு அப்பாற்பட்டது ஒப்பந்தத் தொகை ரூபா 832,183,00. 14-03-2002 அன்று கொடுக்கப்பட்ட முற்பணம் ரூபா 7000,000.00. இது இன்னமும் நிலுவையாக இருக்கிறது. ஒரு வேலையும் செய்யப்படவில்லை.

**7. ஊர்காவற்துறைச் சந்தை**

ஒப்பந்தக்காரர் நல்லூர் - ப.நோ.கூ.சங்கம். ஒப்பந்தத் திகதி - 4-10-2001.

ஒப்பந்தத் தொகை - ரூபா3,500,000.00. முற்பணம் ரூபா 3,000,000.00 பின்வரும் திகதிகளில் வழங்கப்பட்டிருக்கின்றன.

8-10-2001 ரூபா - 2,500,000.00
10-10-2001 ரூபா - 500,000.00

இந்த முற்பணம் தீர்க்கப்படவில்லை. ஒப்பந்தகாரரால் செய்துமுடிக்கப்பட்ட வேலை ரூபா1,400,000 மட்டுமே என மதிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்களின்படி நல்லூர் ப.நோ.கூ.ச இந்தக் காலப்பகுதியில் 7 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது.

இவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 44,207,874-98. இவற்றிற்கென வழங்கப்பட்ட மொத்த முற்பணம் ரூபா 36,850,000-00 இம் முற்பணத் தொகையில் ரூபா 27,030,000 இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது (அரசுக்கு திருப்பிக் கையளிக்கப்படாமல்). ஒப்பந்தகாரருக்கு கொடுக்கப்பட்ட முற்பணம் அல்லது அவரால் தீர்க்கப்பட்ட முற்பணம் ஆகியவற்றிற்கும் மிகக் குறைந்த சிறிய அளவான வேலையே செய்யப்பட்டிருப்பதாக தலைமை பொறியியலாளரின் (கட்டடம்) மதிப்பீடு எடுத்துக் காட்டுகிறது. அன்றைய அரசாங்க அதிபரின் வேண்டுகோளின் பேரில், அன்றைய அரசாங்க அதிபருடன் தாங்கள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டதாகவும், திரு.கிரிதரனுக்கும் திரு.நகுலேஸ்வரனுக்கும் முற்பணங்கள் வழங்கப்பட்டதாகவும் இவர்கள் இருவரும் பதிவேட்டில் ஒப்பமிட்டு, ப.நோ.கூ.சங்கத்திற்கு 3% தொகையை கொமிசனாகக் கழித்துவிட்டு, மிகுதியைப் பெற்றுக்கொண்டதாகவும் நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் எங்களுக்குத் தெரிவித்தார். முற்பணக் காசோலைகளுடன் இவர்கள் இருவரும் ப.நோ.கூ.சங்கத்திற்குச் செலவார்கள்.

யாழ் செயலகத்தில் தொழிற்பட்ட RRAN இன் பொறியியல் ஆலோசகராக திரு.கிரிதரன் வேலைசெய்தார். இவருக்கு மதிப்பீடுகள் செய்யவும் BOQQ வைத் தயாரிக்கவும் ஆன அதிகாரமும் அளிக்கப்பட்டிருந்தன. இதனுடன் நில்லாது இவர் ஒரு ஒப்பந்தகாரராகவும் தொழிற்பட்டார் எனத் தெரியவருகிறது. இதன் மூலம் இவர், அரச அதிபரினால் ப.நோ.கூ. சங்கத்திற்கு கொடுக்கப்படும் முற்பணக் காசுகளையும் சேகரித்தார் என்பதும் தெரிகிறது. இவற்றைச் சுயமாக விளக்கும் 13-03-2003 திகதியிடப்பட்ட நல்லூர் ப.நோ.கூ.ச. பொது முகாமையாளரது கடிதம் இத்துடன் உங்களது பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு11

**B) வடமாகாண மீன்பிடி கூட்டுறவுச் சமாசம்**

**1. பனிக்கட்டியாகிகள் மற்றும் கட்டடம்**

ஒப்பந்தத்திகதி - 11-05-2001
ஒப்பந்தக்காரர் - வ.மா.மீ.கூ.சமாசம்
மதிப்பீட்டின் மொத்தக் கிரயம் - ரூபா 5,908,056-46
ஒப்பந்தத்தொகை - ரூபா 6,000,000.00
கொடுத்த முற்பணம் - ரூபா 3,000,000.00
தீர்க்கப்பட்ட முற்பணம் - ரூபா 2,400,836-00
முற்பண நிலுவை - ரூபா 599,164-00

இந்த வேலை நடைபெற்ற இடத்தை யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், திரு.மாவை சேனாதிராஜா, திரு.சிவாஜிலிங்கம், வேறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்பு மேலதிகச் செயலாளர், யாழ். பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் 6.04.2002 அன்று பார்வையிட்டனர். குப்பை கூளங்கள் அகற்றப்பட்டதைத் தவிர வேறொரு விதமான வேலையும் நடைபெறாததை இவர்கள் தெரிந்து கொண்டார்கள். இந்த நிலைமையில், முற்பணத் தீர்வைக்காக ரூபா 2,400,836 எவ்வாறு கொடுக்கப்பட்டது என்பது விளங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது.

**2. யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத அறை**

2001 ஆம் ஆண்டு, இதற்கான ஒப்பந்தம் வ.மா.மீ.கூ சமாசத்துடன் செய்யப்பட்டது.இதற்கென முற்பணமாக ரூபா 6,000,000 உம் வ.மா.மீ.கூ. சமாசத்திற்குக் கொடுக்கப்பட்டது.

வேலை - ஒப்பந்தக்காரரால் இடைநிறுத்தப்பட்டது. பொருத்தமான இடத்தில் இக்கட்டடம் அமைக்கப்படாததினால, இக்கட்டட அமைப்பை வேறு இடத்திற்கு மாற்றும்படி, போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.இங்கு செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 2,000,000 இற்கும் குறைவானது என தலைமைப் பொறியியலாளர் (கட்டடம்) மதிப்பிட்டிருக்கிறார்.

**3. வட்டு. விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் கோவில்**

ஒப்பந்தகாரர் - வ.மா.மீ.கூட்டுறவு சமாசம்
ஒப்பந்தத்தொகை - ரூபா 5,000,000.00
வழங்கப்பட்ட முற்பணம் - ரூபா 3,500,000.00
நிலுவையாயிருக்கும் முற்பணம் - ரூபா 1,500.000.00
முடிந்த வேலை இன்னமும் மதிப்பிடப்படவில்லை

## C).கைதடி ப.நோ.கூ.ச

ஒப்பந்தகாரர் - கைதடி ப.நோ.கூ.ச.
ஒப்பந்தத்தொகை - ரூபா 9,513,761-84
வழங்கப்பட்ட முற்பணம் - ரூபா 8,013,000-00
நிலுவையாயிருந்த முற்பணம் - ரூபா1,000,000-00

இந்த வேலையை செய்துமுடித்துவிட்டதாக ஒப்பந்தகாரர் எனக்கு அறிவித்ததைத் தொடந்து, வேலை முடிப்பு அறிக்கையை எனக்குச் சமர்ப்பிக்குமாறு தலைமைப் பொறியியலாள்ரை (கட்டடம்) நான் பணித்திருக்கிறேன். இந்த வேலை வேறெந்த தகுதிவாய்ந்த பொறியியலாளராலும் மேற்பார்வை செய்யப்படவில்லை.

## D) யாழ்.இந்துக்கல்லூரி

ஒப்பந்தகாரர் - யாழ் ப.நோ.கூ.ச.
மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா7,784,192-20
ஒப்பந்தத் தொகை ரூபா10,000,000-00

முற்பணமாக ரூபா 8,500,00.00 ஒப்பந்தக் கொடுப்பனவாக ரூபா 483,400.00 கொடுக்கப்பட்டன. முற்பணம் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

## E) மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

ஒப்பந்தகாரர் - கோவிலின் புனரமைப்புக் குழு
மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் - ரூபா 8,178,235-75
ஒப்பந்தத்தொகை - ரூபா11,000,000-00
கொடுத்த முற்பணம் - ரூபா9,900,000-00
தீர்க்கப்பட்ட முற்பணம் - ரூபா9,899,000-00
வேலை மதிப்பீடுகள் இன்னமும் செய்யப்படவில்லை.

## F) நகுலேஸ்வரம் கோயில்

ஒப்பந்த தொகை - ரூபா15,000,000-00
கொடுக்கப்பட்ட முற்பணம் - ரூபா9,150,000-00
முற்பணத்தில் நிலுவை - ரூபா3,000,000-00

நகுலேஸ்வரம் கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், யாழ். இந்துக்கல்லூரி, வட்டு. விசாலாட்சி விஸ்வநாத சமேத ஆலயம் தவிர்ந்த அனைத்து ஏனைய ஒப்பந்தங்களும் RRAN இன் ஆலோசக பொறியியலாளரின் நேரடிப் பொறுப்பில் இருந்ததுடன்,இவர் ஒப்பந்தகாரரிடமிருந்து முற்பணங்களைப் பெற்றிருக்கிறார். சுயவிருப்பத்துடன் ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. எமது அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் ஆவணங்களின்படி,பொதுநிதியை குற்றவியல் பிழையான கையாடலுக்குரிய கருவிகளாகவே இந்த ஒப்பந்தகாரர்களை அன்றைய அரச அதிபரும், RRAN இன் பொறியியல் ஆலோசகரும் பாவித்தனர் என்று சந்தேகிக்கப் போதுமான வலு இருக்கிறது.

அரசாங்க நிதியியல் கோவைகளை சரிவர பின்பற்றாமை,ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் வழங்க அதிகாரமற்றிருந்தும் வழங்கியமை. மற்றும் ஒப்பந்தகாரரிடமிருந்து அத்தகைய முற்பணங்களைச் சேகரித்தமை போன்ற வழிகளைக் கையாண்டு பொது நிதியை அபகரிக்க மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது. RRAN பொறியியலாளர் மதிப்பீடுகளைத் தயாரிக்கிறார். அந்த மதிப்பீடுகளை அங்கீகரித்திருக்கிறார். வேலைகளை செய்வித்திருக்கிறார் மற்றும் அரச அதிபரின் அனுசரணையுடன் ஒப்பந்தகாரரிடமிருந்து முற்பணங்களை வாங்கியிருக்கிறார். இந்த அரச அதிபரோ, முடிக்கப்பட்ட வேலைகளை மதிப்பீடு செய்யாமல்,முந்திய முற்பணங்கள் சரிவரத் தீர்க்கப்பட்டனவா என்பதைப் பாராமல்,ஒப்பந்தகாரரின் கடந்தகால செயல்களை கணக்கிலெடுக்காமலே எல்லா முற்பணக் கொடுப்பனவுகளையும் அனுமதித்திருக்கிறார். எத்தகைய சூழ்நிலையில் ஒப்பந்தகாரர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள், எவ்வாறு இந்த பொதுநிதிகளை (RRAN&M/RRR) கையாடுவதற்கான முகவர்களாக அன்றைய அரச அதிபரும்,RRAN பொறியியலாளர் திரு.P.கிரிதரனும் பாவித்தார்கள் என்பதை எடுத்துக் காட்ட நல்லூர் ப.நோ.கூ.ச. பொதுமுகாமையாளரின் 13.03.2003 திகதியிடப்பட்ட கடிதமும் அவர் அரச அதிபருடன் செய்து கொண்ட 7 ஒப்பந்தங்களும் போதுமானவையே.

C.C. – **யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும்.**

ஒப்பம்:

**C.பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாணம்.**

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. உடன்பாடு; 15 ஆம் திகதி கைச்சாத்திடப்படும்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்-ஜே.வி.பிக்குமிடையிலான கூட்டணி குறித்த உடன்படிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில், ஜே.வி.பி. மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இந்தப் பேச்சுக்களின்போதே, எதிர்வரும் 15 ஆம் திகதி கூட்டணி குறித்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி குறித்த உடன்படிக்கை 46 பக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில்-கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பியின் சார்பில் - அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் கைச்சாத்திடுவர் என முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இந்தக் கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூனறு மாதங்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொன்மையான சின்னம் அக்கராயனில் மீட்கப்பட்டது!

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின், நிலை ஆற்றின் படுகையருகில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துக்களைக் கொண்ட உலோகச் சின்னம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் தேடலாளர் ந.குணரட்ணம் - அக்கராயன் குளத்தின் அலை கரைக்குப் பின்னாலுள்ள, நிலை ஆற்றுக்கரையில் இந்த எழுத்துச் சின்ன உலோகத்தைக் கண்டெடுத்துள்ளார்.



உலோகம் மற்றும் வட்டவடிவச் சுடுமண் இலச்சினைகளும், இலங்கையின் முதல் நாணயமான நீள்சதுர 'லக்குமி' நாணயங்களும், ஏனைய வட்ட நாணயங்களும், செப்பனிடப்பட்ட பளிங்கு மணி, வளையங்களும் உட்பட பல்வேறு சான்றுகளும் இப்பகுதியில் இவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட உலோகச் சின்னத்தில் - 2 வரிகளாகப் பிராமி எழுத்துக்கள் உள்ளன. தொல்பிராமி வடிவ எழுத்துகளில் கீழ் வரியில் 'நாக' என்ற சொல் இருப்பதாக அதனை வாசித்த, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் செ.கிருஷ்ணராசா தெரிவித்துள்ளார்.

இதன்மேல் வரி வாசிக்கப்படவில்லை. இந்த வரிவடிவம் 2000 முதல் 2500 ஆண்டுகள்வரை தொன்மையானதாகும். இந்த உலோகம் வெண்ணிறமானதாகும். இந்த உலோகத்தை மீட்ட குணரட்ணம், நிலை ஆற்றங்கரையில் 3000 ஆண்டுகள்வரை தொன்மையான பெருங்கற்கால ஈமச்சின்னங்களையும், அக்கராயன் வலதுகரைக் காட்டுப்பகுதியில் 2700 ஆண்டுகள் வரை தொன்மையானதாகக் காலக்கணிப்பு செய்யப்பட்ட பெரியதொரு ஈமச்சின்ன கட்டுமானத்தையும் ஏற்கனவே கண்டுபிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- அறிதிரு.

# இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்கள்; ஹக்கீமின் யோசனைகள் ரணிலிடம்!

## இன்று கையளிக்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக, விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் கையளிக்கவிருக்கும் திட்டவரைபில் முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பாக உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்த திட்டமொன்றை - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளது.

இடைக்கால நிர்வாக யோசனைகளில் முஸ்லிம்கள் விவகாரம் தொடர்பாக இடம்பெறவேண்டிய விடயங்கள் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹகீம் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்டதன் அடிப்படையிலேயே, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது திட்டத்தை இன்று-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகளையும் கவனத்தில் எடுத்து, புதிய திட்டவரைபு ஒன்றை விரைவில் அரசாங்கம் - புலிகளிடம் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.



பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரியான ரட்ணநாயக்க கதறி அழும் காட்சி.

# சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டவர்களை இத்தாலிக்கு அனுப்புவோரை கைதுசெய்ய ஏற்பாடு!

## கப்பலில் கைதான 260 பேரும் பாகிஸ்தானியர்கள்

(கொழும்பு)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாக வெளிநாட்டவர்களை அனுப்பும் குழுக்களைக் கண்டுபிடிப்பதற்காக ஐந்து விசேட பொலிஸ் குழுக்கள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பொலிஸ் குழுக்கள் இரண்டு முக்கிய நபர்களை அடையாளம் கண்டிருப்பதாகவும், இவர்கள் தலைமறைவாகியுள்ளதால் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - நேற்று அதிகாலை கடற்படையினரால் காலி - குடவல கடற்பரப்பில் வைத்துக் கைப்பற்றப்பட்ட கப்பல் - மாலைதீவில் பதிவு செய்யப்பட்டதென்றும், இதன் கப்டனான ரஷ்ய நாட்டவர் உட்பட, உக்ரேனைச் சேர்ந்த உதவி கப்டன் மற்றும் ஐந்து ஜோர்ஜிய மாலுமிகள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கப்பலிலிருந்த 185 பாகிஸ்தானியரும், இன்னொரு படகில் இருந்த 71 பாகிஸ்தானியரும் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் தங்காலை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இதேவேளை - கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கப்பல் - நேற்றுமுன்தினம் மாலை காலி துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிற்றூழியர் வேலை நிறுத்தம் தொடர்கிறது

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலை சிற்றூழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம்- நேற்றுமுதல் நாடுமுழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளுக்கு விஸ்தரிக்கப்பட்டதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

கடமைக்கு வராத சிற்றூழியர்கள் வேலையிலிருந்து விலகியதாக அரசாங்கம் அறிவித்திருந்த போதும், தாம் இந்த மிரட்டலுக்குப் பணியப்போவதில்லை என்று போராட்டம் நடத்தும் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

# மட்டு சிறுவர் பராமரிப்பு இல்லங்களை தமிழர் புனர்வாழ்வு கழகம் பொறுப்பேற்கும்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அமைந்துள்ள, மூன்று சிறுவர் பராமரிப்பு இல்லங்களையும் பொறுப்பேற்று நடத்துவதற்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தீர்மானித்துள்ளது.

தற்போது போதிய வசதிகளின்றி இயங்கிவரும் இந்த சிறுவர் பராமரிப்பு இல்லங்களையே - தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப்பேற்கவுள்ளது. இதற்கமைய வாகரை, பளுகாமம், கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளிலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் பொறுப்பேற்கப்படவுள்ளன.

அத்துடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பதினொரு சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவு மற்றும் உதவிகளை வழங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையுடன் அமெரிக்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## அந்நாட்டு காங்கிரஸ் ஒப்புதல் கொடுத்தது

இலங்கையுடன் சுதந்திரப் பொருளாதார ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்திருப்பதாக, காங்கிரஸின் இலங்கை விவகாரங்களுக்கான பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - காங்கிரஸ் அனுமதி கிடைத்துள்ளதையடுத்து, இலங்கை அரசாங்கத்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அமைதியான அரசியல் சூழல் - சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு நல்ல ஊக்கத்தை அளித்துள்ளது.

இலங்கையுடன் ஏற்கனவே முதலீட்டு ஒப்பந்தமும், கொள்கலன்களைச் சோதனையிடும் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கொள்கலனைச் சோதனையிடும் சுங்க ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் கைச்சாத்திட்ட முதலாவது தெற்காசிய நாடாக இலங்கையே இருந்துவருகிறது.

இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கையை - இந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையமாகப் பேணிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலும் இரு தமிழ் இளைஞர்களை கிழக்கு மேல் நீதிமன்று விடுவித்தது

(திருகோணமலை)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் இளைஞர்களை, கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுதலை செய்தது.

மூதூரைச் சேர்ந்த சிவனேஸ்வரன், ஜெயச்சந்திரன் ஆகிய இளைஞர்கள் - விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சிபெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான வழக்கு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மேற்படி இரண்டு இளைஞர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறுவதாக அரசாங்கச் சட்டத்தரணி தெரிவித்தார்.

இதையடுத்து, இரண்டு இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிவான் சுப்பிரமணியம் பரமராஜா உத்தரவு பிறப்பித்தார்.

# யாப்புக்கு முரணாக செயற்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

## ஜனாதிபதிக்கு ஜோன் அமரதுங்க எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் அரசியலமைப்புக்கு முரணான வகையில் - அரசாங்கத்தின் மீது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எதையும் மேற்கொண்டால், பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும் எனறு எச்சரிக்கை விடுத்துள்ளார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சு ஆகியவற்றைப் பொறுப்பேற்கவுள்ளதாக வெளியான செய்திகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்புக்கு முரணாக, அமைச்சுக்களைப் பொறுப்பேற்க ஜனாதிபதி முற்பட்டால் - பாரதூரமான விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும் என்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க எச்சரித்துள்ளார்.

## யாழ்.பல்கலையில் மாவட்டமட்ட பளுதூக்கும் போட்டி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஆதரவுடன், பளுதூக்கும் அணி நடாத்தும்-மாவட்ட மட்டத்திலான பளுதூக்கும் போட்டி, நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# கல்லடி முகாமை நிரந்தரமாக்கும் நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபம்!

மட்டக்களப்பு மாநகரசபைப் பிரிவில் - கல்லடியில் அமைந்துள்ள படைமுகாமை நிரந்தர முகாமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவது குறித்து, மட்டு.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

தற்போது போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், முகாமைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வைப் பாதிக்கும் என்றும், ஜோசப் பரராஜசிங்கம் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, படைத்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் பதிலளிப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ - ஜோசப் பரராஜசிங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மண்முனை வடக்கு பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்ற பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, கல்லடி முகாமை நிரந்தரத் தளமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு, கோரவுள்ளதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.




புதிய ஜனநாயகக் கட்சியின் 25 ஆவது ஆண்டுவிழாவினையொட்டி நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் - அக்கட்சியின் வடபிரதேச செயலாளர் கதிர்காமநாதன், சி.நவரெட்ணம், கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்திவேல், சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:ராஜ்குமார்)

### கண்டெடுத்த அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள் சில 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரும்பிராய் மேற்கு, கோண்டாவிலைச் சேர்ந்த நாகமுத்து தவராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், தொழில் அடையாள அட்டையும் - பங்களா ஒழுங்கை, மல்லாகத்தைச் சேர்ந்த நடராசா கிருஸ்ணராசா என்பவருடைய விசேட அடையாள அட்டையுமே 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி, அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# புதிய ஜனநாயகக் கட்சியின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழா!

புதிய ஜனநாயகக் கட்சியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர்- சி.கா.செந்திவேல் தலைமையில் யாழ். பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

வரவேற்புரையை கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் க.தணிகாசலமும், ஆரம்பவுரையைச் சட்டத்தரணி இ.தம்பையாவும் நிகழ்த்துவர்.

கட்சியின் மூத்த தோழர்கள் கௌரவிப்புடன் 'இன்னோர் உலகிற்காய் எழுவோம்' என்ற கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்ச்சிகளில் கவிதா நிகழ்வு, தனி மற்றும் கூட்டு ஆற்றுகைகள், இசைப்பாடல்கள், வீதி நாடகம் ஆகியனவும், ஆண்டுவிழா கருத்துரைகள் மற்றும் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

வாசுதேவ நாணயக்கார, சோ.தேவராஜா, சி.பன்னீர்செல்வம், வசந்த திஸநாயக்க, கா.கதிர்காமநாதன், சி.நவரத்தினம், சி.இராஜேந்திரன், மு.தியாகராஜா, பி.சந்திரகுமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் கணபதிப்பிள்ளை நூற்றாண்டு நாள் கருத்தரங்கு!

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை நூற்றாண்டு நினைவுநாள் கருத்தரங்கு இன்று பி.ப 2 மணிக்கு, யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், வரவேற்புரையை கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும், நினைவுநாள் வாழ்த்தை துணைவேந்தர் எஸ்.மோகனதாஸும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயரும் வழங்குவார்கள்.

இதையடுத்து, பேராசிரியர் கணபதிப்பிள்ளை - 'சில நினைவுகள்' என்ற பொருளில் கலாநிதி க.சொக்கலிங்கமும், 'பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் கலைநோக்கு' என்ற பொருளில் - கலாநிதி க.குணராஜாவும், 'பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சமூகநோக்கு' என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும், 'பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் வரலாற்று நோக்கு' என்ற பொருளில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

நன்றியுரையை, கலாநிதி ம.இரகுநாதன் நிகழ்த்தவுள்ளார்.

# விலாச்சிய - மன்னார் வீதியை மீண்டும் திறப்பதற்கு ஆலோசனை

1985 ஆம் ஆண்டுமுதல் மூடப்பட்டிருக்கும் விலாச்சிய - மன்னார் வீதியை, மீண்டும் போக்குவரத்துக்காகத் திறந்து விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அநுராதபுரத்துக்கும், மன்னாருக்கும் இடையில், வில்பத்து சரணாலயம் ஊடாக இணைக்கின்ற இந்த வீதி, 1985 ஆம் ஆண்டு சிறி மகா போதி மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து மூடப்பட்டது.

விலாச்சிய - மன்னார் வீதி திறக்கப்பட்டால், தற்போது பாவிக்கப்படும், மன்னார் - அநுராதபுரம் வீதியின் போக்குவரத்துத் தூரம் 35 கிலோமீற்றரால் குறையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான, கொண்டச்சி பண்ணைக்குச் செல்வதற்கு இந்த வீதியைப் பயன்படுத்தமுடியும். இந்தவீதி முன்னர் கண்டி- குருநாகல் பகுதிகளுக்கு மீன் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்த வீதியைத் திறந்துவிடுவது பற்றி தந்திரிமலை விகாராதிபதி வண.சந்திரரட்ண தேரோ, அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எக்கநாயக்க, விலாச்சிய பிரதேச செயலாளர் நந்தகுமார ஆகியோர் ஆலோசனைகளை நடத்தினர்.

விலாச்சிய - மன்னார் வீதியில் 18 கி.மீற்றர் பகுதி நீண்டகாலம் பயன்படுத்தப்படாததால் புதர்கள் மூடிக் காணப்படுகின்றன. இந்தப் பகுதியைச் சிரமதானம் மூலம் திருத்தவும், ஏனைய பகுதிகளைப் புலிகளுடன் கலந்துபேசி திருத்தம் மேற்கொள்வது பற்றித் தீர்மானிக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

### பண்டிதமணி பிறந்ததின விழா

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூற்றுநான்காவது பிறந்ததின விழா - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், 'பண்டிதமணி அவர்களின் எழுத்து' என்ற பொருளில் மயிலங்கூடலூர் நடராஜனும், 'பண்டிதமணி அவர்களின் பேச்சு' என்ற பொருளில் பண்டிதை பொன்.பாக்கியமும், 'பண்டிதமணி அவர்களின் வாழ்க்கை வளம்' என்ற பொருளில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் கருத்துரைகளை நிகழ்த்துவர். தொகுப்புரையை வித்துவான் க.சொக்கலிங்கம் நிகழ்த்துவார்.

# சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் வசித்து, அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மேற்படி வித்தியாலய பழைய மாணவர் தம்பதியினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட, இரண்டு கணினிகளின் உதவியுடன் இங்கு கணினி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (58)


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் - க.வினிதா
முகவரி - ஓடக்கரை, பருத்தித்துறை.

ஏழாவது அகவையில்

பெயர் - ப.தாரகா
முகவரி - ராஜஸ்தலம், அல்வாய்.



ஒன்பதாவது அகவையில்



பெயர் - பா.கீர்த்தனா
முகவரி - 18, பிறவுண் றோட், 1ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்




# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சங்கானை | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 35/= | 35/= | 60/= | 70/= | 30/= | 45/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 60/= | 70/= | 65/= | 70/= | 80/= |
| கத்தரிக்காய் | 25/= | 10/= | 30/= | [illegible] | 20/= | 20/= |
| பாகற்காய் | 50/= | 30/= | 40/= | 60/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 30/= | 40/= | 20/= | 20/= |
| கரட் | 60/= | 40/= | 60/= | 60/= | 55/= | 60/= |
| பீற்றூட் | 30/= | 30/= | 50/= | 50/= | 45/= | 40/= |
| முருங்கைக்காய் | 100/= | 100/= | 160/= | 160/= | 100/= | 100/= |
| வெங்காயம் | 25/= | 25/= | 35/= | 35/= | 30/= | 30/= |
| பச்சைமிளகாய் | 60/= | 35/= | 50/= | 60/= | 40/= | 40/= |

# யாழ். குடாநாட்டுச் சந்தையை ஆக்கிரமிக்கும் தென்பகுதி உற்பத்திப் பொருட்கள்!

ஜே.ஜெ.சுதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அடுத்து - யாழ்.குடாநாட்டுச் சந்தையில் அதிகரித்துள்ள ஒரு நடவடிக்கை விளம்பரப் படுத்தல்களின் அதிகரிப்பாகும். பத்திரிகைகள், சுவரொட்டிகள், இலவசப்பொருட்கள் விநியோகங்கள், விளம்பரத்தட்டிகள் எனப் பலவழிகளிலும், இந்த விளம்பரப்படுத்தலானது குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பாக - குடாநாட்டில் இந்த விளம்பரத்தட்டிகள் மூலமான விளம்பரப்படுத்தலானது, அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. பல்வேறு நிறுவனங்களும் தமது பொருட்கள், சேவைகள் தொடர்பான விளம்பரத்தட்டிகளைக் குடாநாட்டின் பொது இடங்களிலும், வீதியோரங்களிலும் நாட்டிவைத்துள்ளனர்.

இத்தகைய தட்டிகள் அண்மையில் வீசிய கடுங்காற்றினால், பல இடங்களில் தூக்கி வீசப்பட்டிருப்பதுடன், முறிந்தும் விழுந்துள்ளன. இவ்விளம்பரத்தட்டிகள் தெற்கிலிருந்தே தயாரித்து இங்கு கொண்டு வரப்படுகின்றன. 150 சதுர அடி வரையான விளம்பரத்தட்டிகள் தயாரிப்பதற்கு 45 ஆயிரம் ரூபாவரை செலவிடப்படுகின்றது. அதைவிட, வீதிகளில் நாட்டுவதற்கு- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இத்தகைய அளவுத் தட்டிகளுக்கு 30 ஆயிரம் ரூபா வரை கட்டணம் செலுத்தப்படுகிறது. மாநகர எல்லைக்குள் நாட்டப்படும் தட்டிகளுக்கு- மாநகரசபைக்கும் ஒரு தொகை அனுமதிக்காகச் செலவு செய்யப்படுகிறது. ஆக, ஒட்டு மொத்தமாக ஒரு பாரிய விளம்பரத்தட்டிக்கு 1,00 000 ரூபாவுக்குமேல் செல்விடப்படுகிறது.

இதில் ஆச்சரியப்படும் விடயம் என்னவெனில், இத்தொகையில் ஒரு சிறு அளவு எம்மை வந்தடைகின்றது. மிகுதி முற்று முழுதாகத் தெற்கிற்கே திரும்பிவிடுகிறது. இத்தகைய விளம்பரத்தட்டிகளை நாட்டுவதற்குக்கூட தெற்கிலிருந்து ஆட்கள் அழைத்துவரப்படுகின்றனர். அந்தவகையில், தொழில் வாய்ப்புக்குக்கூட இங்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. பல விளம்பரத்தட்டிகளில் தமிழைக் காணவே கிடைப்பதில்லை.

ஆங்கில எழுத்துக்கள் கண்ணைப் பறிக்கும்படியாகப் பளிச்சிடுகின்றன. இவ்வாறாகத் தற்பொழுது வீதிகளின் ஓரங்களில் நாளுக்குநாள் இந்த விளம்பரத்தட்டிகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களும், கண்களை மூடிக்கொண்டு அனுமதியளித்துக் கொண்டிருக்கின்றன.

விளம்பரங்கள் ஒரு நிறுவனத்தின் விற்பனையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு உத்தியாகும். எனவே, இந்த விளம்பரங்களைக் கண்டு மயங்கி- கொள்வனவை மேற்கொள்ளுதல் கூடாது. மாறாக, அந்த விளம்பரங்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிந்த பின்பே, கொள்வனவு தொடர்பான தீர்மானம் எடுக்கவேண்டும். அதுவே திறன்வாய்ந்த கொள்வனவாகவும், அறிவுள்ள செயற்பாடாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய நிலைமைகளானது, குடாநாட்டில் பல தீமையான விளைவுகளை உண்டுபண்ணியுள்ளது. அந்தவகையில், முக்கியமான தீமையான விளைவு குடாநாட்டு வர்த்தகத்தில் தோன்றியுள்ள சமச்சீரற்ற தன்மையாகும். அதாவது, தற்பொழுது தெற்கில் இருந்ததான பொருள், இங்கு சந்தைப்படுத்தப்படும் அளவுக்கு (விற்பனை செய்யப்படும் அளவுக்கு), இங்குள்ள உற்பத்திப் பொருட்கள் தெற்கிற்குச் சந்தைப்படுத்தப்படுவதில்லை.

இந்தநிலையே குடாநாட்டு வர்த்தகத்தில் பாரிய இடைவெளி தோன்றக் காரணமாயிற்று. இந்த இடைவெளி அதிகரிப்பு, மேலும் பல விளைவுகளையும் உண்டுபண்ணியுள்ளது. அதாவது, தெற்கிலிருந்து குடாநாட்டுக்கான சந்தைப்படுத்தலானது அதிகரித்துள்ளதாயின், கொள்வனவும் அதிகரித்துள்ளது. கொள்வனவு அதிகரிப்பானது, கொள்வனவுச் செலவினை அதிகரிதுள்ளது.

ஆயினும், கொள்வனவுச் செலவு அதிகரிப்புக்கேற்ப எமது வருமானங்களில் அதிகரிப்பு ஏற்படவில்லை. ஏனெனில், குடாநாட்டிலிருந்து தெற்கிற்கான பொருட்களின் சந்தைப்படுத்தல் குறைந்த நிலையிலுள்ளது. எனவே, கொள்வனவுச் செலவு அதிகரிப்பானது, எமது சேமிப்புகளிலிருந்தே ஈடு செய்யப்படுகின்றது. இதனால் எமது சேமிப்புக்கள் வீழ்ச்சி அடையும் நிலை தோன்றியுள்ளது. சேமிப்பு வீழ்ச்சியானது முதலீடுகளில் வீழ்ச்சியை உண்டுபண்ணியுள்ளது.

முதலீடுகளின் வீழ்ச்சி, மீண்டும் வருமானத்தில் வீழ்ச்சியை உண்டுபண்ண, நாம் கீழே கீழே தள்ளப்படும் நிலை தோன்றியுள்ளது. இவ்வாறாக நாம் எம்மை அறியாமலே ஒரு நச்சுவட்டச் செயற்பாட்டுக்குள் சிக்கிக்கொண்டுள்ளோம். இந்த நச்சுவட்டம் எமது பொருளாதாரத்தின் அடித்தளத்தையே ஆட்டம்காண வைத்துவிடும்.

அடுத்து, குடாநாடு - வர்த்தகத்தில் சந்திக்கும் ஒரு பாரிய பின்னடைவு, உள்ளூர் உற்பத்திகளில் ஏற்பட்டுள்ள வீழ்சியாகும். இவ்வாறான வீழ்ச்சிக்குப் பின்வரும் காரணங்களை நாம் குறிப்பிட முடியும். அந்த வகையில் முக்கிய காரணமாகத் தற்பொழுது அமைவது தெற்கிலிருந்ததான பொருட்களின் சந்தைப்படுத்தலானது அதிகரித்துள்ளமையாகும். இந்தச் சந்தைப்படுத்தலின் அதிகரிப்புக் காரணமாக உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கொள்வனவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தெற்கிலிருந்து புதிய புதிய பொருட்கள் விலை குறைவாகக் கிடைக்கப் பெறுவதால் மக்கள் இவற்றை கொள்வனவு செய்யவே நாட்டம் காட்டுகின்றனர். இதனால், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் அதிகளவிற்கு விற்பனை செய்யப்படாமையால், இவற்றில் இருந்தான இலாபம் வீழ்ச்சி அடைவதோ அல்லது நட்டம் ஏற்படும் நிலையோ ஏற்படுகிறது. இதனால், இந்த உற்பத்திகளை மேற்கொள்ளமுடியாதநிலையோ, அல்லது வளர்ச்சி காணமுடியாத நிலையோ ஏற்படுகிறது.

அடுத்து இந்த உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்புக்களோ அன்றி தேவையான முதலீடுகளைச் செய்யவேண்டிய கடன் உதவிகளோ குடாநாட்டு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்காமையும், இந்த உற்பத்திகள் வீழ்ச்சியடைய மற்றுமொரு காரணமாக அமைகின்றது. மேலும் படைத் தரப்பினர் சில இடங்களில் உள்ளூர் உற்பத்திகளை ஆரம்பிக்கத் தடை விதித்திருப்பது சில உற்பத்திகளின் மீது மட்டுப்பாடுகளை விதித்துள்ளமை என்பனவும் இந்த உள்ளூர் உற்பத்திகளின் வீழ்ச்சிக்கோ, அல்லது வளர்ச்சியில் தடையையோ ஏற்படுத்தும் பிறிதொரு காரணியாகவும் அமைகிறது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மற்றுமொரு தீய விளைவு - சூழல் மாசுபடுத்தலானது மிக அதிகரித்துள்ளமை ஆகும். அதாவது, அதிகரித்த வர்த்தகத்தின் விளைவாகப் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை மிக அதிகரித்துள்ளது. இவை பல நூறு வருடங்கள், ஏன் ஆயிரம் ஆண்டுகள்கூட சூழலில் அழிவடையாது அப்படியே இருக்கக்கூடியன.

இவற்றின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க இவை நிரந்தரமாகவே சூழலில் தங்கி விடுவதால், எமது சூழல் மிகமோசமாகவே பாதிக்கப்படுகிறது. தற்பொழுது அதிகளவான பொருட்கள் பொலித்தீனால் பொதியிடப்பட்டே இங்கு வருகின்றன. குளிர்பான வகைகள்கூட பிளாஸரிக்கிலான போத்தல்களிலேயே அடைககப்பட்டு வருகின்றன. அதைவிட, வீட்டுத்தளபாடங்கள் தற்பொழுது முற்றும் பிளாஸ்ரிக் மயமாகவே வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சூழல் மாசுபடுத்தலை உயர்ந்தநிலைக்கே இட்டுச்செல்கின்றன. இது எமது சந்ததி சந்ததியாகத் தொடரப்போகும் ஒரு பாதிப்பான விளைவாகும். எனவே, இந்த நிலையும் தடுக்கப்படவேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

ஆகவே, இவ்வாறான விளைவுகளை வெற்றிகொள்ளவேண்டுமாயின் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், அவர்கள் கீழ்வரும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். அந்த வகையில் குறிப்பாக, உள்ளூர் உற்பத்திகளை மக்கள் கொள்வனவுசெய்ய முன்வருதல் வேண்டும். தரமிக்கதான, குறைந்த விலையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கிடைக்கும் நிலையில், இவற்றினை கொள்வனவு செய்வதை தவிர்த்து, வெளியிடங்களிலிருந்து கிடைக்கும் இத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்யும் மனோபாவப் போக்கினை மக்கள் மாற்றிக் கொள்ளவேண்டும்.

அதாவது வெளிநாட்டுப் பொருட்கள், பல்தேசியக் கம்பனிகளின் பொருட்கள் மீதான மக்களின் மோகம் குறைக்கப்படுதல் வேண்டும். உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் - உள்ளூர் உற்பத்திகள் வளர்ச்சி அடைவதுடன், எமது சேமிப்புக்களும் எம்மைவிட்டு வெளியேறுவது தடுக்கப்படும்.







சூழல் மாசுறுதல் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வே அதிகளவில் வேண்டப்படுகின்றது. சூழல் மாசடைதலில் பிரதான காரணியாக விளங்கும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை மக்களே குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதன்மூலமே சூழல் மாசடைதலையும் இழிவுபடுத்திக் கொள்ளமுடியும்.

மேலும் மக்களின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளிலும் - உள்ளூர் தொழில் நிறுவனங்களுக்கும், உள்ளூர் வாசிகளுக்கும் அதிகளவு முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அளிப்பதன் மூலம் இத்தகைய திட்டங்களால் உள்ளூர் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடைய துணைசெய்யப்படுவதுடன், உள்ளூர் மக்களின் முன்னேற்றத்துக்கும் இது உதவும். இதற்கு உதாரணமாக - நியாப்பின் மையக்கிராம திட்டங்கள், மற்றும் உலக வங்கியினால் செயற்படுத்தப்பட்ட குளங்கள் புனரமைக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றை எடுத்துக் கூறமுடியும்.

எனவே, தற்பொழுது குடாநாட்டு வர்த்தகத்தில் எழுந்துள்ள நிலைமைகள் மாற்றம் அடையவேண்டுமாயின், மக்களின் மேலெழுந்த பங்களிப்பு என்பதே இங்கு முதன்மை பெறுகின்றது. ஏனெனில் வர்த்தகத்தைப் பொறுத்தவரை அங்கு கொள்வனவாளரே (மக்களே) பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றனர். கொள்வனவாளரைத் திருப்திப்படுத்துவதன் ஊடாக நிறுவனங்கள் தமது விற்பனையை உச்சப்படுத்த முயல்கின்றன. இந்நிலையில் கொள்வனவாளர் சமூகப்பொறுப்புடன் நடந்துகொள்ளும்போது, வர்த்தக நிறுவனங்களும் அந்த நிலைக்குத் தம்மை மாற்றிக்கொள்கின்றன.

இதன்மூலம், சமூக நலன் என்பது பாதுகாக்கப்பட வழிஏற்படுகின்றது. அத்துடன், குறித்த சமூகமும் தன்னை வளர்த்துக்கொள்ளவும், வாழ்க்கைத் தரத்தினை உயர்ந்த நிலையில் பேணிக்கொள்ளவும் முடியும். ஒட்டு மொத்தத்தில் மக்களே இப்பிரச்சினையை வெற்றிகொள்ள வலுமிக்க சக்திகளாக இங்கு இருக்கின்றனர் என்றால் அது ஒன்றும் மிகையல்ல.



'A.9' — திறந்த பொருளாதாரம்...?

# தொழில் வங்கி



| நிறுவனம் | யுனிசெப் | கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சு | இலங்கை கைத்தொழி அபிவிருத்திச்சபை (IDB) |
|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | செயற்பாட்டு உதவியாளர் (யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி) | இளைஞர் படைக்கு அங்கத்தவர் களைத் தெரிவுசெய்தல். (வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதி) | நிறுவன அபிவிருத்தி முகா யாளர் பதவி |
| அடிப்படைத் தகுதி | க.பொ.த.சாதாரணதரம் அல்லது உயர்தரத்தில் ஆங்கிலத்தில் விசேட சித்தி மற்றும் கணிதத்தில் சிறப்புச் சித்தி | க.பொ.த. (சாதாரணதர) சித்தி | பொருளியல், வர்த்தகம் தொ பாக அங்கீகரிக்கப்பட்ட ப கலைக்கழகம் ஒன்றில் பட்ட பெற்றிருத்தல். |
| விண்ணப்ப முடிவு திகதி | 16.07.2003 | 21.07.2003 | 14.07.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# தாயகத்தின் தொழில்நுட்ப புரட்சியின்




அமெரிக்க, சிலிக்கன் வலியில் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று, வட - கிழக்கில் வாழும் மக்களுக்கு ஓர் உயர்தொழில்நுட்ப நிறுவனமொன்றை நிர்மாணிக்கத் திட்டமிட்டது. அந்நிறுவனத் திட்டத்தின்படி ஆரம்பத்தில் கிளிநொச்சி நகரில் இப்பாடசாலை ஒரு தற்காலிக வளாகம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களினதும், அவர்களது நண்பர்களின் திறமைகளும், ஆற்றல்களும் இப்பாடசாலையூடாக வட - கிழக்கு மக்களிற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புத் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

வன்னிப்பகுதியில் ஓர் உயர்தொழில்நுட்பக் கல்விநிறுவனமொன்றை அமைக்கும் நோக்குடன் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பைத் தமக்குள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். U.S.A சிலிக்கன் பள்ளத்தாக்கில் கருக்கொண்ட இந்த உயரிய முயற்சியின் விளைவாக, சர்வதேச தமிழ் தொழில்நுட்ப தொழில் வல்லுநர்கள் அமைப்பு INTERNATIONAL TAMIL TECHNICAL PROFESSIONAL ORGANIZATION (ITTPO) கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது.

தமிழ் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்று சேர்ந்து அவர்களது வல்லமைகளையும், திறமைகளையும் இலங்கையின் வட - கிழக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதை இந்த அமைப்பு தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. புலம்பெயர் தமிழர்களையும், அவர்களது நண்பர்களையும் ஒருங்கிணைத்து வழி நடத்துவதன் மூலம் இந்த ஒன்றுபட்ட சேர்க்கை தரும் மேலதிக சக்தி எமது தாயகத்தின் மேம்பாடடிற்குப் பெரிதும் பயன்படத்தக்கதாய் இருக்கும் என ITTPO நம்புகிறது.

ITTPO என்ற இந்த அமைப்பின் பணிப்பாளர் சபைத் தலைவராக, இலங்கையில் பிறந்தவரும், இன்று IBM நிறுவனத்தில் விஞ்ஞானியாகப் பணிபுரிபவருமான இரத்தினம் சூரியகுமார் பொறுப்பு வகித்து வருகின்றார். இதன் பணிப்பாளர்களில் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் என மிகவும் புகழ்பூத்த அறிஞர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் எல்லோரும் கணினியின் வன்பொருள் (Hard ware) அல்லது மென்பொருள் (Soft ware) துறைகளில் சிறப்புத்திறமைகள் பெற்றவர்கள். அநேகமானோர் சிலிக்கன் பள்ளத்தாக்கில் பணிபுரிந்து வருபவர்கள். (INTEL, MICROSOFT என்ற முன்னணி நிறுவனங்கள் உட்பட)

அமைப்பின் தலைமைத் தொழில்நுட்ப அலுவலர் ஜெய் குமாரசூரியர் - கடந்த ஆண்டு இலங்கைக்கு வருகைதந்து, இத்தகைய உயர்தொழில்நுட்பக் கல்விநிறுவனத்தின் தேவை பற்றியும், நடைமுறைச்சாத்தியம் குறித்தும் ஆய்வுசெய்தார். இதன்பின் இவ்வமைப்பு, கிளிநொச்சியில் இந்த நிறுவனத்தை அமைப்பதற்குரிய திட்டத்தைத், திறம்பட அமுல்படுத்துவதற்குத தேவையான ஆதரவினை உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் தொழில்நுட்ப சமுதாயத்திடமிருந்து பெற்றுக்கொண்டது. இணையத்தினூடாகத் தங்களிடையே தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்ட இவர்கள், VANNI INSTITUTE OF TECHNO LOGY என்ற அமைப்பினைக் கிளிநொச்சியில் அமைக்கத் தீர்மானித்ததுடன், அதன் கட்டமைப்பையும் வரையறுத்துக் கொண்டார்கள்.

இந்த அமைப்பானது சுருக்கமாக VIT (VANNI INSTITUTE OF TECHNOLOGY) என்றும், V-TECH என்றும் அழைக்கப்படுகிறது. இதன் முதலாவது வளாகம் கிளிநொச்சியில் அமைவதால், 'VANNI CAMPUS' எனச் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகின்றது. இங்கு வழங்கப்படும் போதனைப் பகுதிகளாவன,

01. தரவுத்தள பிரயோக உருவாக்கம். (Data base Application Development)
02. வலைத்தள அடியொற்றிய பிரயோக உருவாக்கம் (Web Application Development)
03. கணினித் தொடர்பாடல்களும் பிணையமாக்கல்களும். (Computer Communication and net work)
04. இலத்திரனியல் (Electronics)

என்பனவாகும். இவற்றில் மாணவர்கள் விரும்பிய ஒரு போதனைப் பகுதியினைத் தெரிவுசெய்துகொள்ளலாம்.

மாணவர் சேர்க்கைக்கான தகைமைகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் - கணினியில் ஏற்கனவே அனுபவம் உள்ளவர்களும் - விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஆர்வம் கொண்டவர்களும்- கணிணித்துறையில் தொழில்புரிய விரும்புபவர்களிடமும் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுவதோடு, விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

01. கணிதம், விஞ்ஞானம், வணிகம் சம்பந்தமான நெறியில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு.

# ஒரு புதிய வடிவம் 'வன்னி ரெக்'

அல்லது

02. க.பொ.த (உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியும், க.பொ.த.(சா/த) இல் ஆங்கிலத்தில் சித்தியும் (S) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும் (C)

மேற்கூறிய தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை மேற்கொள்ளலாம். எனினும், இந்த நிறுவனமானது மனிதாபிமான அடிப்படையில் போர், வன்முறை என்பன காரணமாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களிற்கு விசேட சலுகை அடிப்படையில் விண்ணப்பம் செய்ய அனுமதி அளிக்கின்றது. எனினும், விண்ணப்பதாரிகள் அனைவரும் பின்வரும் அனுமதி நடைமுறைக்கு கட்டுப்பட்டே தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

01.விண்ண்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் குறிப்பிட்ட தகுதியான விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு நுழைவுத் தேர்வு (Entrance Exam) ஒன்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

நுழைவுத் தேர்வு பின்வரும் கட்டமைப்பினைக் கொண்டதாக அமையும். இவை மூன்று பகுதிகளைக் கொண்டமைந்த 2 1/2 மணித்தியால வினாத்தாள்களாகும்.

(A) முதலாவது வினாத்தாள் கிரகிக்கக்கூடிய ஆற்றல், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் திறன், தெளிவான பொது அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதாக அமைந்திருக்கும். இவ் வினாப்பத்திரம் 60 நிமிடங்கள் கொண்டதாக அமையும். இங்கு தரப்படும் வினாக்கள் அனைத்தும் பரீட்சார்த்தியால் விடையளிக்கப்பட வேண்டியவை. இவ்வினாத்தாள் மாத்திரம் தமிழ்மொழியில் அமைந்திருப்பதோடு, விருப்பத் தேர்வு (MCQ) முறையையும் பின்பற்றியுள்ளதால் மாணவர்கள் மூன்றில் ஒரு விடையினைத் தெரிவுசெய்யலாம். இவ் வினாத்தாள் சுமார் எட்டுப் பக்கங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

(B) இரண்டாம் வினாத்தான் ஆங்கிலமொழித்திறனைப் பரீட்சிப்பதாக அமைந்திருக்கும். இவை பெரும்பாலும் இலக்கணம் சார்ந்த வினாக்களாகவே அமைந்திருக்கும். அத்தோடு, இவை அமெரிக்க மொழி நடைப் பாணியிலேயே பின்னப்பட்டிருக்கும். இவ்வினாத்தாள் 45 நிமிடங்களைக் கொண்டதாக அமையும்.

(C) மூன்றாவது வினாத்தாள் சிந்தனைத்திறன், மற்றும் ஆங்கிலப் புலமை என்பவற்றினைப் பரீட்சிப்பதாக அமையும். இவ்வினாத்தாள் 45 நிமிடங்களைக்கொண்டதாக அமையும். நான்கு வினாக்கள் தரப்படும். அவற்றில் இரண்டு வினாக்களிற்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு, குறைந்தது 100 சொற்களிற்கு குறையாமலும், கூடியது 200 சொற்களிற்கு மேட்படாமலும் விடையளித்தல் வேண்டும். இவை கட்டுரை சார்ந்த வினாக்களாகவே அமையும்.

இந்த வினாப்பத்திரம் இலக்கண ஆற்றல், சிந்தனைத் திறன், ஆங்கிலப் புலமை என்பவற்றைப் பிரிசோதிப்பதாக அமைகிறது.

(தொடரும்)

**சேனாதிராசா ஜெயானந்தன்**
**இடை வரவு விரிவுரையாளர் (கணினி),**
**தொழிழ்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

# முப்பதாண்டு பாரம்பரியத்துடன்

**கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் இரவீந்திரா தமது வங்கியின் செயற்பாடுகள் குறித்து 'நமது ஈழநாடு' தொழில் மலருக்கு அளித்த நேர்காணல் இது.**



**யாழ்ப்பாணத்தில் உங்கள் வங்கியின் சேவையைப் பற்றி...**

கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையானது 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட வங்கிப் பாரம்பரியத்தைக் கொண்டது. கொமர்ஷல் வங்கி யாழ். கிளை 30 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. கடந்த காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுற்றவேளையில் வங்கியும் அதன் யாழ்.கிளை ஊழியர்களும் மக்கள் தேவையை மனத்தில் கொண்டு வங்கிச் சேவையினைப் பல்வேறு இடர்களின் மத்தியிலும் சமயமறிந்து திறம்பட வழங்கியதை யாழ்.மக்கள் அறிவார்கள்.

யாழ்ப்பாணத்தில் ATM இயந்திரத்தினை முதன்முறையாக அறிமுகப்படுத்திய வங்கியாகவும் எமது யாழ். கிளையே மிளிர்கின்றது. யாழ்.மக்களின் அதிகரித்த வங்கிச் சேவையின் தேவையையும், வாய்ப்பினையும் கருத்திற்கொண்டு சனிக்கிழமை வங்கிச் சேவையினையும் (Saturday Banking) வழங்கிவருகின்றோம். மேலும் எமது தலைமைப்பீடம், இரண்டு கிளைகளை (ஒன்று நெல்லியடி மற்றையது சுன்னாகம்) இங்கு மிகவிரைவில் நிறுவவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி வருகின்றன என்பதை இத்தருணத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'அருணலு' சிறுவர் கணக்கினூடாகச் சிறார்களுடைய கல்வி வளர்ச்சிக்கான ஊக்குவிப்பாக, 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்றிடங்களில் சித்திபெற்றவர்களுக்கு வருடாவருடம் பரிசில்களை வழங்கிவருகின்றோம். இது தவிர - இந்த பிராந்தியததின் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை இயலுமான வரையில் தொடர்ச்சியாக வழங்கிக்கொண்டே வருகின்றோம். கடந்த வருடமும் எமது, நவீனமயப்படுத்தப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்ட யாழ்.கிளையின் அங்குராப்பண வைபவத்தின் போது - எமது முகாமைத்துவ இயக்குநர் அமித. குணரட்ணவினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணத்தில் புனரமைப்பு, கைத்தொழில் அபிவிருத்தி என்பவற்றிற்கு உதவும் வகையில் உங்கள் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் வசதிகள் பற்றி...**

கடந்த காலங்களில் இங்கு நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாகப் பாரிய கைத்தொழில் முயற்சிகளில் முதலீடு செய்வதற்குரிய சாதகமான சூழல் காணப்படவில்லை. பெரும்பாலும் வியாபார நோக்கிலான நடவடிக்கைகளே இடம்பெற்றன. எனவே வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் பெரும்பாலும் வியாபாரத்தேவைகளுக்கே (Trading Activities) வழங்கப்பட்டன. தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான சூழல் - முயற்சியாளர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே இங்கிருந்த கைத்தொழில் நிறுவனங்கள் மீண்டும் புதுப்பொலிவுடன் வளர்ச்சி பெறவும், புதிய கைத்தொழில் நிறுவனங்கள் உருவாகுவதற்கும் மேலும் நம்பிக்கையூட்டக்கூடிய சாதகமான சூழல் தோற்றுவிக்கப்படவேண்டும்.

கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவும் வகையில் அமைந்த "சாகன்யா" (Sahanya) என்ற ஓர் கடன்திட்டம் தற்போது எமது வங்கியில் நடைமுறையிலுள்ளது. இது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (Asian Development Bank) நிதியீட்டம் பெற்ற கைத்தொழில் முயற்சிகளிற்கான விசேட கடன் திட்டமான "சாகன்யா" (Sahanya Scheme) என்ற திட்டமாகும். இத்திட்டத்தில் இணைந்து பங்குபற்றும் மூன்று வங்கிகளுள் எமது வங்கியும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் முயற்சிகளுக்குக் குறைந்த வட்டியுடனும், சலுகைக் கால (Grace Period) வசதிகளுடன்கூடிய நீண்டகால மீளச்செலுத்துகை வசதிகளுடனும் பாரிய கடன்களைப்பெறும் வசதிகள் உள்ளன. முயற்சியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் திட்டத்தின் சாத்தியத்தன்மை, நிலைத்து நீடிக்கும் தன்மை, பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் திட்டத்தினை ஆராய்ந்து வங்கி கடனை வழங்கும்

மற்றும் குறைந்த வருமானமுடையவர்களுக்கு வீடு கட்டுவதற்கு, வீடு வாங்குவதற்கு,

# அதிகரித்த வங்கிச் சேவை!

காணி வாங்கி வீடு கட்டுவதற்கு, வீட்டிற்கான கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கு, குறைந்த வட்டி வீதத்தில் (10.50%) ரூபா 500,000/- இற்கு உட்பட்ட கடன் வழங்கப்படும்.

மேலே நான் குறிப்பிட்டது போன்று அபிவிருத்திக்கான சாதகமான சூழல் உறுதிப்படுத்தப்படுகின்றபோது- முதலீட்டாளர்களும், வங்கியாளர்களும் இணைந்து அபிவிருத்திக்கான தமது பங்களிப்பினை முனைந்து செயற்படுத்துவர் என்பதில் ஐயமில்லை.

**கொமர்ஷல் வங்கியினது சேவையாற்றும் திறன் பற்றி கூறுவீர்களா?**

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது நிறுவனங்களின் ஒழுங்கமைப்பிலும், அவை வழங்கும் சேவையின் போக்கிலும் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய உலகமயமாதல் என்ற போக்கில் வங்கிகள் - தகவல் தொழில்நுட்பத்தின் அனுகூலங்களை உள்வாங்கி, தத்தமது செயற்பாட்டை மறுசீரமைக்காவிடின்- பாரிய போட்டிச் சூழலை எதிர்கொள்ளத் திராணியின்றி நிலைத்து நிற்கமுடியாத நிலையினை எதிர்கொள்ள நேரிடும். இந்த யதார்த்தத்தைச் சரிவரப் புரிந்துகொண்ட கொமர்ஷல் வங்கியானது சரியான நேரத்தில், சரியான தொழில்நுட்பத்தைப் பெற்று, சரியான திசையில் சென்றுகொண்டிருக்கின்றது. அதன் பெறுபேறாகவே, அது தொடர்ச்சியாகப் பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. அதாவது, இலங்கையின் முதற்தரக் கம்பனி (No.1 Company in Sri Lanka) என்ற விருது, இலங்கையின் மிகசிறந்த வங்கி (Best Bank in Sri Lanka by Global Finance) என்ற விருது, (தொடர்ச்சியாக 5 ஆவது தடவையாக), 2001 இலும் 2002 இலும், இலங்கையின் தலைசிறந்த வங்கி (Bank of the year 2001, 2002 by the Banker) என்ற விருது, முதற்தரமான வங்கி ஆண்டறிக்கைக்கான விருது (First place in the financial sector for the Best presented Accounts Award for the Annual Report - 2001), இலங்கையின் மனிதவள முகாமைத்துவத்திற்கான தேசிய விருது (Overall National Award for Human Resource Management - 2002) என்று இவ்வாறாக முன்னணி விருதுகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. மற்றும் SLAA+ என்ற தரத்தையுடைய கடன் குறியீட்டுப் புள் ளியைப் பெற்ற ஒரேயொரு வர்த்தக வங்கி என்ற நிலையினை 2002 ஆம் ஆண்டிற்கும் மீள உறுதிப்படுத்திக்கொண்டதன் மூலம் அதன் தனித்துவத்தையும், உறுதித்தன்மையையும், நம்பிக்கையையும் நிலைநாட்டியுள்ளது. எனவே கொமர்ஷல் வங்கியில் கணக்கு வைத்திருப்பதே ஒரு கௌரவம் என்ற நிலையே உள்ளது. எமது வங்கியின் மிகப்பரந்த கணினிமயப்படுத்தப்பட்ட (110 கிளைகள்) கிளைகளினூடான துரிதசேவை, நாடு பூராகவும உள்ள தன்னியக்க இயந்திர (150 ATM) சேவையுடன், உலகம் பூராகவுமுள்ள ஒரு மில்லியன் Cirrus ATM ஊடாக கணக்கை நடைமுறைப்படுத்தக்கூடிய வசதிகள் எமது வங்கியின் மேன்மைக்கு எடுத்துக்காட்டு.

இது தவிர, தகவல் தொழில்நுட்பத்தின் பெறுபேறாக விடுமுறை வங்கிச்சேவை, சுப்பர் மார்க்கெட் வங்கிச்சேவை, இன்டர்நெட் வங்கிச்சேவை, தொலைபேசி வங்கிச்சேவை, செல்லிடத் தொலைபேசி வங்கிச்சேவை என்றவாறு சேவைகள் விரிவடைந்தே செல்கின்றன.

**நேர்காணல் - மயில்வாகனம்.**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஐயவுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே*
*மெய்யுணர்வு இல்லா தவர்க்கு*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## முன்னேற்றம் நிரந்தரமா...?

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இவ்வாண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் திருப்தியடையக்கூடியதாகவும், ஊக்கமூட்டுவதாகவும் இருப்பதாக - நிதியமைச்சர் கே.என். சொக்ஸி கூறியிருக்கிறார்.

கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது - இந்த வளர்ச்சி வீதம், இலங்கையின் பொருளாதாரத்திற்கு புதிய நம்பிக்கையைத் தந்திருப்பதாகக் கூறும் அவர் - தொழில்சார் உற்பத்தி, உல்லாசப்பயணத்துறை, ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம் எனப் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சரின் இந்த அறிவிப்புக்கு, அரசாங்க ஊடகங்களில் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதோடு,

தற்போதைக்கு - எதிர்க்கட்சிகளைச் சமாளிப்பதற்கு, புதியதொரு அஸ்திரத்தை அரசாங்கம் கையில் பெற்றுக் கொண்டதாகவும் இந்தத் தகவல்கள் அமைந்திருக்கின்றன.

கடந்த ஆண்டுகளில் - இலங்கையின் பொருளாதார வளர்ச்சி காணாமற்போய், வீழ்ச்சி மட்டுமே கண்டிருந்த நிலைமை மாறி - இன்று இப்படியாகக் கூறக்கூடிய ஒரு ஏது நிலை உருவாக்கப்பட்டிருப்பது போர் தணிந்ததால்தான் அன்றி வேறொன்றுமல்ல என்பது வெளிப்படையானது.

1983 க்குப் பின்னர் - இலங்கையின் முக்கிய செலவீட்டுப் பகுதியை, படைத்தரப்புக்கும் பாதுகாப்புக்கும் ஒதுக்கி விட்டு - மீதியுள்ள எச்சசொச்சங்களை வைத்து 'நாட்டை ஏதோ சமாளித்துக்கொண்டுபோகும்' தன்மையே இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமானது.

குறிப்பிடத்தக்க அபிவிருத்தித் திட்டங்களோ, மக்கள் நலனுக்கான யோசனைகளோ ஏதுமின்றி - பொதுஜன ஐக்கிய முன்னணியாக இருந்தாலென்ன, ஐக்கிய தேசிய முன்னணியாக இருந்தாலென்ன - இலங்கையைக் குட்டிச் சுவராக்கியதையே பொருளாதாரரீதியில் ஈட்டிக்கொள்ள முடிந்தது.

கடன்கள் ஒருபுறம், பணவீக்கம் மறுபுறம், தேசிய உள்நாட்டு உற்பத்திகள் தேய்ந்து போனது இன்னொருபுறமென - 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக' - மீட்சியில்லாத அதலபாதாளத்துக்கே, இலங்கைப் பொருளாதாரம் சென்றது.

இதன் தாக்கம் இன்னமும் பல வருடங்களுக்கு நீடிக்கும் என்றே, இன்றும் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

இவ்வாறான சூழலில் - கடந்த ஒன்றரை வருடகாலப் போர்நிறுத்தமும், சமாதானச் சூழலும் - இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் - உய்வடையும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகவே பொருளியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இந்த நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கான பொறுப்போ, நிதானமோ அல்லது எதிர்காலம் குறித்த சிந்தனையோ அற்றவர்களாகவே - கொழும்பில் ஆளும் தரப்பினர் நடந்துவருகின்றனர்.

ஜனாதிபதி முதலாக - அங்குள்ள அதிகார வர்க்கத்தினரையும், அரசியற்கட்சிகளையும் பொறுத்தளவில் - இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கவலையோ அல்லது நாட்டின் சீரழிவுகளைப் பற்றிய மனக்கிலேசமோ இல்லாது மீண்டும் போரைத் தொடங்கும் முனைப்பே பெருகிக் காணப்படுகின்றது.

வட - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தக்கூடியதான இடைக்கால நிர்வாகமொன்று, விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் ஏற்படுத்தப்படுமானால் - அது, வட - கிழக்கை மட்டுமல்ல, முழு இலங்கைத் தீவுக்குமான சமாதானம் நோக்கிய பாதையை உறுதியாக்கவே உதவும் என்ற அடிப்படையான ஞானம் கூட இல்லாது,

மீண்டும் போரை வலிந்திழுக்குமுகமாக - அறிக்கைகளையும், நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் இவர்களை - 'தன் தலைமீது தானே மண்வாரிக் கொட்டும்' யானையின் செயலுக்கே ஒப்பிடமுடியும்.

ஜனாதிபதி, ஜே.வி.பி, சிஹல உறுமய என இத்தரப்புக்களின் எண்ணமும் போக்கும் - இலங்கைத் தீவை இன்னமும் சுடுகாடாக்குவதோடு, அந்தச் சாம்பல் மேட்டிலிருந்து அரசியல் நடத்தும் குறுகிய, கொடூரமான இனவாதப் போக்கைத்தான் சுட்டிநிற்கின்றது.

அதேவேளை - ரணில் அரசாங்கமோ, தனது துணிச்சலற்ற, தாமதமான அணுகுமுறைகளால் - அமைதி முயற்சிகளின் வேகத்திற்கு தானே தடைக்கற்களாகி நிற்கும் நிலையை உருவாக்கி வருகின்றது.

ஏற்பட்டுள்ள அமைதிச்சூழலை உறுதிப்படுத்துவதற்கான அல்லது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான செயல்களுக்கும், ரணில் அரசாங்கத்தின் அறிவிப்புகளுக்குமான இடைவெளி வெகுதூரமாகியே வருகின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் அமைதி பற்றிய எதிர்ப்பார்ப்பு நிலையை, நாளொரு தினமும் சரிந்து செல்லுமுகமாகத்தான் - ரணில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

இதுதான் ஒருபுறமென்றால் - இன்னொரு பக்கம், அரச படைகளின் கெடுபிடிகளும், போர்நாட்ட மனோபாவமும், அமைதிச்சூழலுக்கான தளர்வுகளற்றதாகவே தொடர்வதும் -

போராளிகளை ஆத்திரமூட்டி, அவர்களது பொறுமையை இழக்கச் செய்வதான நடவடிக்கைகளும் -

நிதியமைச்சர் சொக்ஸியின் திருப்தியை, அவர் பெற்றிருப்பதாகக் கூறும் ஊக்கத்தை - நீடிப்பதற்குத் துணை தராத புறச்சூழ்நிலைகளையே உருவாக்கிவருகின்றன.

# அமெரிக்க அரச அதிகாரிகளுடன் அமைச்சர் மிலிந்த முக்கிய பேச்சு!

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த விஞ்ஞான கைத்தொழில், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, அங்கு முக்கிய பிரமுகர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க வர்த்தகப் பிரிதிநிதி றொபேட் சொஹேலக், அமெரிக்க ஜனாதிபதியின் உதவியாளரும், தேசிய பாதுகாப்புப் பேரவையின் தெற்காசிய அலுவல்களுக்கான சிரேஷ்ட பணிப்பாளருமான ஜிம் மொரியாரிட்டி, இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகார சிரேஷ்ட பணிப்பாளர் கிறிஸ்ரினா றொக்கா, இலங்கைக்கான புதிய தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரிட் ஆகியோரை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

சமாதான நடைமுறை, ஜப்பானில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்குப் பின்னரான நிலைமை மற்றும் இரு நாட்டு உறவுகள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட - அமெரிக்க அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளார்.

இந்த வருட இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுக்கும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் இடையில் இடம்பெறவுள்ள சந்திப்புத் தொடர்பாகவும், அமைச்சர் மிலிந்த மொறகொட பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

மேலும், உலகவங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் சாங் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிர்வாகப் பணிப்பாளர் தகிசாகி ஆகியோருடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன்போது, ரோக்கியோவில் கிடைத்த நிதியுதவியைச் சீரானமுறையில் உபயோகிப்பதனை உறுதிப்படுத்த, நிறுவன கட்டமைப்பொன்றை அரசாங்கம் அமைக்கும் என்றும் - உலக வங்கி, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளிடம் அமைச்சர் மிலிந்த மொறகொட உறுதி வழங்கியதாகத் தெரியவருகிறது.

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தரை நீக்கமுடியாது!

*மூன்றாம்நிலைக் கல்விஅமைச்சு அறிவிப்பு*

(கொழும்பு)

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைப் பதவிநீக்கவேண்டுமென்று, பல்கலைக்கழக மாணவர் குழுக்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்கமுடியாதென - மூன்றாம்நிலைக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மூன்றாம்நிலைக் கல்விஅமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலுள்ள குறிப்பிட்ட சில மாணவர்கள்தான் கல்விச் செயற்பாடுகளைச் சீருலைத்து வருகின்றனர். இவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ள சக்திகளின் தூண்டுதலினால்தான் செயற்படுகின்றனர். இந்தச் சக்திகளால் மாணவர்கள் கல்வி வாய்ப்புக்களை இழந்து வருகின்றனர்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தர் மீது சுமத்தப்படடுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து, கவனத்தில் எடுத்துள்ளபோதும், துணைவேந்தரைப் பதவிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாது எனறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகாபொல நிதியத்துக்கு நிதிவழங்க ஜனாதிபதி சந்திரிகா இணக்கம்!

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர்சபையிலிருந்து ஜனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஐம்பது சதவீதத்தை, மகாபொல நம்பிக்கை நிதியத்திற்கு வழங்குவதற்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

இத்தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் அறிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்கலைக்கழக மாணவர்களின் நன்மை கருதியும் - இரண்டு மாணவர் குழுக்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு ஒன்றாக இணைத்துக்கொள்ளவுள்ளதாலும், ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ஜனாதிபதி வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டினால், அண்மைக்காலமாக அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இழுபறிகள் நிலவிவந்தன.

இந்த இழுபறிகளின் ஒரு கட்டமாகவே தேசிய அபிவிருத்தி லொத்தர்சபையை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றிருந்தார்.

இதேவேளை, மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கான நிதியை ஜனாதிபதி நிதியம் விடுவிக்காவிட்டால், நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்படி நிதியத்தின் பணிப்பாளர் ஷாமிலா பெர்னாண்டோ எச்சரிக்கை செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க மருத்துவர்களின் சம்பள உயர்வுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு!

சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு மருத்துவத்துறையை ஸ்தம்பிக்கச் செய்த அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு, அரசதுறையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களினதும் சம்பள முரண்பாட்டை அதிகரிக்கச் செய்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளதாகப் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர், டொக்டர் மகிந்த லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த சம்பள உயர்வுக்கு எதிராக கடந்த வாரமும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இத்துடன், மேலும் இரண்டு மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னர் தமது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்துத் தமது சங்கம் தீர்மானிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வினால் பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவ அதிகாரிகளின் சம்பள முரண்பாடு அதிகரித்துள்ளது என்றும், சம்பள முரண்பாட்டை நீக்குமாறுகோரி தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நாகரிகமாக அரசியலை நடத்துவது எவ்வாறு?

## இளம் எம்.பிக்களுக்கு பயிற்சிப் பட்டறை

நாகரிகமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து, இளம் அரசியல்வாதிகளுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் ஆரம்பமானது.

முப்பத்தைந்து வயதுக்குட்பட்ட - கடந்த பொதுத்தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல்வாதிகள் மத்தியில் அதிகரித்துவரும் ஒழுங்கீனங்களைக் கவனத்தில் கொண்டு - நாகரிகமான அரசியலை நடத்துவதற்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கு வருடாந்தம் ரூ.53,000 சம்பள உயர்வு

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வின் மூலம், வருடாந்தம் 53 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு - மருத்துவர்களுக்குக் கிடைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பள உயர்வுக்காக அரசு 580 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன், மாதாந்தம் 4420 ரூபா மேலதிகக் கொடுப்பனவும் அரச மருத்துவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும், 1997 ஜூலை முதல் இம்மாதம் வரையான காலப்பகுதிக்குள் மருத்துவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நிலுவைப் பணத்தில் 50 சதவீதத்தை 2005 ஆம் ஆண்டுக்கும், 2011 ஆம் ஆண்டுக்கும் இடையில் வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி, 2005 ஆம் ஆண்டுமுதல் வருடாந்தம் 26,520 ரூபா மருத்துவர்களுக்கு நிலுவைக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

(01)

# கலையும் கூடும்

(நேற்றைய தொடர்ச்சி...)

"தனக்கு மூக்குப்போனாலும், எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்பட்டால்போதும்" என்பது, தமிழிலுள்ள ஒரு பழமொழி.

இலங்கையில் - தமிழ்மக்கள் தமது தாயகம் என்று, உரிமைகோரும், வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை - அந்நியர்களின் தேவைக்குக் கொடுக்கவும், அவர்கள் தேவைக்குப் பயன்படுத்தவும் சிங்களத் தலைமைகள் தயாராக



விருக்கின்றன.

ஆனால, தமிழர்கள் தங்கள் தாயகம் என்று இந்தப் பிரதேசத்தை உரிமை கொண்டாடக்கூடாது என்பதில், அவை ஒற்றுமையாகவும், உறுதியாகவும் இருக்கின்றன.

திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை, இந்தியா பயன்படுத்துவதற்கு, நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, தனது உலக ஒலிபரப்புச் சேவையினை விஸ்தரிப்பதற்கு, இடமளிக்கப்பட்டிருக்கிறது.

இன்னமும், திருகோணமலையைப் பங்குபோட்டுப் பயன்படுத்துவதற்கு - வெளிநாடுகள் திட்டம் தீட்டிச் செயற்பட்டுவருகின்றன.

இலங்கையின் இறைமைபற்றி - இந்த விடயத்தில் சிங்கள அரசியற்தலைவர்களோ, ஆன்மீகத் தலைவர்களோ, பத்திரிகையாளர்களோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தமிழர் இந்தப் பிரதேசத்தில் உரிமை கொண்டாடக்கூடாது என்பதில், இவர்கள் ஆர்வமாகவும், அக்கறையாகவும் இருக்கின்றனர்.

சிக்கிம் மீது அக்கறைகொண்டு, அதையொரு மாநிலமாக இந்தியா இணைத்துக் கொண்டது. இப்போது, திபெத்தை - சீனா தனது மாநிலமாக எடுத்துக் கொண்டதை இந்தியா அங்கீகரித்துவிட்டது. சிக்கிமை இந்தியா தனது மாநிலமாக எடுத்துக் கொண்டதை, இப்போது சீனா அங்கீகரிக்கவில்லை. இந்தியாவைப்போல, சீனாவும் காலப்போக்கில் சிக்கிமை இந்தியா எடுத்துக் கொண்டதை அங்கீகரிக்கலாம்.

சிங்களத் தலைமைகளைப் பொறுத்தவரையில் - இலங்கையில் தமிழர் தாயகமான வட - கிழக்கை, வேறெந்த நாடும் - எந்த வழியில் ஆக்கிரமித்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்மக்கள் தமது இறைமையை - ஒருபொழுதும் எவருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பது சிங்களத் தலைமை அறிந்ததே.

போர்நிறுத்தம் என்பது, அடுத்த போருக்கு இருதரப்பும் தயார் செய்வது என்பது வரலாறு.வட -கிழக்கில் ஆக்கிரமித்துள்ள அரச படைகள்- தமது படைமுகாம்களை புனரமைப்பதிலும், புதிய இடங்களில் முகாம் அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றன.

அரச படைகளுக்கு வெளிநாட்டுப் படை நிபுணர்களின் ஆலோசனைகளும், உதவி வருகின்றன. இவைதவிர, வெளிநாடுசெல்லும் அமைச்சர்களும், அதிகாரிகளும் - நாட்டின் பாதுகாப்புக் குறித்துப் பேச்சு நடாத்திவருகின்றனர்.

"மீண்டும் ஒரு போர் இலங்கையில் வேண்டாம். அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கைக்கு இராணுவரீதியில் உதவியளிக்கத் தயாராக இருக்கின்றன" என்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன.

இதிலிருந்தே மீண்டும் ஒரு போருக்கு அரச படைகள் தயாராக இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதேசமயம், விடுதலைப் புலிகள் மீண்டுமொரு போருககுத் தயாராகிவருவதாக, ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கைவிடுத்து

## சமாதான மேகங்கள்

வருகின்றார்.

ஜனாதிபதியின் போர் மூளும் என்ற எச்சரிக்கையினால், பங்குச்சந்தையில் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற, பொருளாதார நிபுணரின் கவலை ஒருபுறமிருக்க, ஜனாதிபதியின் எச்சரிக்கையின் அர்த்தம் என்ன? மீண்டும் ஒரு போரைத் தொடங்கவேண்டும், வெளிநாட்டு இராணுவ உதவிகளைப் பெறவேண்டும் என்பதுதானே, அவர் விருப்பமாக இருக்கின்றது.

இதற்கிடையில் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும, தமது பொறுமையின் எல்லைக்கே தாம் வந்துவிட்டதாகவும் அம்மையார் ஆத்திரத்தில் கூறியிருக்கிறார்.

அம்மையாரின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில், நாட்டில் எந்தக் கொலையும் நடக்காமல், அமைதி நிலவியதாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றார். எவர் போர்முரசு கொட்டினாலும், எந்த வல்லரசுகள் இங்கு போர் மூண்டால் - உதவிக்கு வரும் என்றாலும், விடுதலைப் புலிகளோ, பொதுமக்களோ கவலைப்படுவதாக இல்லை.

நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள், நாடு பிரியப்போகிறது. நாட்டைத் துண்டாடிப் புலிகளின் கையில் வடக்கு - கிழக்கை [illegible]ணில் தூக்கிக் கொடுக்கப் போகிறார் என்பது, தங்கள் அரசியல் ஆதிக்கப் போட்டிக்காகப் பேரினவாதிகள் பிரசாரம் செய்யலாம்.

நாடு எப்போதோ பிரிந்துவிட்டது. தமிழர் தாயகமான வடக்கிலும் - கிழக்கிலும் இப்பொழுது தமிழ்மக்கள் சார்பில் விடுதலைப் புலிகளின் நிர்வாகமே நடந்துகொண்டிருக்கின்றது. வட-கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென மூன்றிலிரண்டு பரப்பளவு - இலங்கை அரசினாலும், அரச படையினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதி என்பது, இவைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகளில் படைகள்தான் இருக்கின்றன. இப்பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் செயற்படவில்லையா, இப்பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் நடைபெறுகின்றது.

இதனால்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப்பீட வளாக மைதானத்தில், கடந்த மாதம் 27 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மாலையில் அலைகடல் எனத் திரண்ட மக்கள் வெள்ளம் - "நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக நீங்கள் - உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்று படையினருக்கு அறிவுறுத்தமுடிந்தது.

பிரதமரின் பிரதிநிதிகள் - புத்தபிக்குகள் முன்னிலையில் தமிழ்மக்கள் தமது உணர்வுகளைத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

நாடு எப்போதோ பிரிந்துவிட்டது. இப்போது ஆக்கிரமித்துள்ள படைகளை வெளியேற்ற வேண்டியதுதான் பாக்கி. நாடு நிரந்தரமாகப் பிரிந்துவிடாமல் இருக்க வேண்டுமானால், விடுதலைப் புலிகளின் உள்ளகச் சுயநிர்ணய உரிமை யோசனையை ஏற்று, சமஷ்டி ஆட்சி அமைப்பை அமைக்க சிங்களத் தலைமைகள் முன்வரவேண்டும். இல்லையேல், இழப்பு அவர்களுக்குத்தான்.

**எஸ்.எம்.ஜி**

# புலனாய்வு நடவழக்கைகளில் இந்தியாவின் 'றோ' அமைப்பு!

இந்தியாவின் சர்வ வல்லமை பொருந்தியது என்று தன்னைத் தானே கூறிக்கொள்ளும் '**RAW**' என்பதன் விரிவாக்கம் - **Research and Analisis wing**.

இந்திய அளவில் சில அலுவல்களில் ஈடுபட்டாலும், அதன் முக்கியமான கவனம் சர்வதேச அரசிய



இந்திரா காந்தி

லில் பின்கதவுக் காரியங்கள். உலகின் அநேக நாடுகளின் உளவுத்துறைகள் செய்வது போலதான், இந்தியாவின் உளவுத்துறையான '**RAW**' வும் **Suppose to be** இந்திய வெளிவிவகாரக் கொள்கைக்கு ஏற்ப- தனது நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கவேண்டும். இதனால், **Suppose to be** என்று சொல்லப்படுவதன் காரணம்? அநேக சமயங்களில் '**RAW**' அப்படி நடந்துகொள்ளாமல், இந்திய வெளிவிவகாரக் கொள்கைகளைக் குழப்பியடித்துவிடுவதன் காரணமாகத்தான்.

இந்த வகையில் - நாடுகளின் வெளிவிவகார அமைச்சின் கொள்கைகளுக்கு ஏற்ப, அந்தந்த நாடுகளின் உளவுத்துறைகள் செயற்படும் என்ற பொதுவான நடைமுறையில் இல்லாமல், '**RAW**' செயற்பாட்டிற்கு ஏற்ப இந்திய வெளிவிவகார அமைச்சின் கொள்கைகள் மாற்றிக் கொள்ளப்படவேண்டியதன்நிலை.

'**RAW**' வின் செயற்பாடுகள் இந்திய உள்துறை அமைச்சின் அல்லது இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரங்களுக்குள் வருவதில்லை. நேரடியாகப் பிரதமரின் கட்டுப்பாட்டுக்குக் கீழே வருகின்றன. இதன் காரணமாக '**RAW**' விற்காக வேலை செய்பவர்கள் பற்றிய விபரங்கள், அவர்களது பதவிகள், சலுகைகள் இந்திய நாடாளுமன்றத்திற்குக்கூடத் தெரிவிக்கப்படாத இரகசியங்கள். '**RAW**' வின் நடவடிக்கைகளுக்கு அவசியமாக இந்தியப் பிரஜைகளுக்கு மாத்திரமல்லாமல், வெளிநாட்டுப் பிரஜைகளும் முக்கியமாக - பாகிஸ்தான், பங்களாதேஷ், சிறிலங்காவின் பிரஜைகள் '**RAW**'வின் மாதா மாத சம்பள விநியோகப் பட்டியலில் இருக்கிறார்கள். இந்திய அரசு **Budget** இல் வருடத்திற்குச் சுமார் 25 கோடி ரூபா பணத்தை '**RAW**' வின் வெளிநாட்டு செயற்பாடுகளுக்கு ஒதுக்குகிறது. அது யாருக்கு? எப்படி? எப்போது? என்றெல்லாம் தெரிவிக்கப்படாமலேயே.

இந்தியாவிற்கு வெளியே '**RAW**' வின் இயங்கு தளங்கள் பெரும்பாலும் இருப்பது வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில். இந்த விடயம் அந்த நாடுகளுக்கும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படாமலேயே இருக்கும். ஒரு நாட்டில் மற்றுமொரு நாட்டின் தூதரகம் அமைக்கப்படும்போது, சம்பந்தப்பட்ட நாட்டின் அரசுக்கு தூதரகம் அமைக்கும் நாடு, தங்களது தூதரகங்களில் யார், யார் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுவது ஒரு மரபு.

இதற்கு இந்தியத் தூதரகங்கள் விதிவிலக்கல்ல. அவர்களைச் சம்பந்தப்பட்ட நாடு - அரசுகளும் இந்தியத் தூதரகங்களில் பணிபுரிபவர்களின் பெயர்ப் பட்டியலைக் கொடுப்பார்கள். அந்தப் பட்டியலை வெளிப்படையாகப் பார்த்தால், எல்லாம் சரியாகத்தான் இருக்கும். பட்டியலில் இருக்கும் ஆட்களின் எண்ணிக்கையும், தூதரகங்களில் வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையும் சரியாக ஒத்துப்போகும். ஆனால், அந்தப் பட்டியலில் இருந்து '**RAW**' வின் முகவர்கள் யார், யார் என்று தெரியவராது. சம்மந்தப்பட்ட '**RAW**' வின் ஆட்களுக்கே வேறு ஏதாவது உப்புச்சப்பில்லாத பதவிகளில் பயிற்சி கொடுக்கப்பட்டு, அநேக சமயங்களில் அவர்களது சொந்தப் பெயர்கூட மாற்றப்பட்டிருக்கும். சில உளவு முகவர்களைச் சில சமயங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பொருத்தமில்லாத **Title** ஐ வைத்தே பிடித்துவிடமுடியும். உதாரணமாக - கொலம்பியா நாட்டில் ஒரு இந்தியத் தூதரகம் இருந்து, அதில் வேலை செய்யும் ஒரு அதிகாரியின் பதவியின் பெயர் **Director of Indian Coffee Export board** என்று இருந்தால், அந்த பதவி பற்றி நீங்கள் சந்தேகம் இல்லாமல் சந்தேகப்படலாம். ஏனென்றால், கொலம்பியா உலகில் முன்னணி **Coffee** உற்பத்தி நாடு. அது ஒருபோதும் இந்தியாவின் **Coffee**யை இறக்குமதி செய்யப்போவதில்லை. இந்தியன் **Coffee** யை ஏற்றுமதிசெய்ய ஊக்குவிக்கும் வகையிலான ஒரு பதவி - கொலம்பியாவிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அவசியமுமில்லை. ஆனால், அப்படியான ஒரு பதவி பொகோடா நகரிலுள்ள **Indian Embassy** இல் இருந்தால் அந்தப் பதவியில் இருக்கும் நபர் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் '**RAW**'வின் முகவராக இருப்பார். அல்லது மிகுதி 10 வீதம் இந்திய வெளிவிவகாரத்துறை இணை அல்லது துணையமைச்சர்களின் மச்சானாக இருப்பார்.

இதற்கு மேலே தொடருமுன்னர் '**RAW**' பற்றி நீங்கள் எந்தளவுக்கு தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதை, இதைப் படித்தபின் முடிவு செய்யுங்கள்.

இந்தியாவின் உள்துறை பற்றிய **Clear** ஆன குறிப்புகள் இருப்பது 1933 ஆம் ஆண்டிலிருந்து. அதற்கு முன்னர் இருந்தவர்கள் ராஜா ராணி காலத்தில், குதிரைகளில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு, ராஜபாட்டையில் பறந்து செல்லும் உறையூர் ஒற்றர்கள். 1933 இல் உலகின் அரசியல் சூழ்நிலை, உலகமகா யுத்தத்தை நோக்கி இருந்தது. இந்தியாவின் அன்றைய எல்லை உளவு சேகரிப்பதில் அவசியமாக இருந்தது.

அன்றைய உளவுத்துறையின் அமைப்பு வடிவம் - உயரதிகாரிகள், வெள்ளையர்கள். கச்சடா வேலைகளுக்கு என்று பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள், சில இந்தியர்கள் என்ற **Range** இல் இருந்தது. 1947 இல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது, கூடவே இலவச இணைப்பாகப் பாகிஸ்தானின் பகையும், எல்லைத் தகராறும் சேர்ந்தே கிடைத்தது. இதனால் இந்தியாவுக்கு - இந்தியர்களால் நடாத்தப்படும் இந்திய உளவுத்துறை ஒன்று அவசியமாகப் போய்விட, இந்திய உளவுத்துறையின் முதல் இந்திய இயக்குநராக நியமிக்கப்பட்டவர் சஞ்சீவிப்பிள்ளை. சஞ்சீவிப்பிள்ளையின் கட்டுப்பாட்டிலிருந்த உளவுத்துறையில் 1949 இல் மிகச்சிறிய அளவிலான முகவர்கள் - சுமார் 10 பேர்கள் அடங்கிய வெளிநாட்டு உளவுப்பிரிவு **Division** ஒன்று அமைக்கப்பட்டதோடுசரி. அந்த வெளிநாட்டு உளவுப்பிரிவு பெரிதாக எதுவும் செய்ததாகத் தகவல் இல்லை. இந்தியா - சீனா இடையிலான 1962 ஆம் ஆண்டு யுத்தமும், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான 1965 ஆம் ஆண்டு யுத்தமும் ஏற்பட்டபோது, இந்திய இராணுவம்- சீனா, பாகிஸ்தான் பற்றிய இராணுவ உளவுத்தகவல் எதுவும் கிடைக்காமல் திண்டாடியது.

அந்தநேரத்தில் இந்திய இராணுவத்தின் தலைமைப்பதவியிலிருந்த ஜெனரல் சௌத்ரி, 1968 இன் முன்னாள் இந்திய அரசை - சர்வதேச உளவுநிறுவனம் ஒன்றின் அவசியம் பற்றித் தொடர்ந்து நிர்ப்பந்திக்க, 1966 இன் இறுதியிலும் 1967 இன் ஆரம்பத்திலும் இந்திய உளவுத்துறையான **IB** யின் ஒரு பிரிவாக இருந்த சர்வதேச உளவுப்பிரிவு சிறிது சிறிதாக விஸ்தரிக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பதவிக்கு வந்தபோது, உள்நாட்டு உளவு விவகாரங்களைக் கவனிக்கும் விதத்தில், ஒரு உளவுப்பிரிவு இருந்தது. அது **IB**.

அதிலிருந்து வேறுபட்டு, இரண்டாவதாக ஒரு உளவுப்பிரிவு சர்வதேச சமாச்சாரங்களைக் கவனிக்கும் விதத்தில் அமைக்கும் யோசனை தோன்றியது. இந்திரா காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க அன்றைய **IB**யில் **Deputy Director** ஆர்.எம். கௌ சர்வதேச உளவுத்துறை அமைப்பு ஒன்றுக்கான திட்டங்கள் அடங்கிய வரைபு ஒன்றைத் தயாரித்துக் கொடுக்க அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியால், இந்தியாவின் முதலாவது சர்வதேச உளவுத்துறை அமைக்கப்பட்டு - அதன் முதலாவது தலைவராக ஆர்.எம்.

**ரிஷி**

கௌ நியமிக்கப்பட்டார். அப்போது அப்படி அமைக்கப்பட்ட அந்த சர்வதேச உளவு அமைப்புக்கு இந்திரா காந்தியால் சூட்டப்பட்ட பெயர்தான் '**RAW**'.

'**RAW**' ஆரம்பிக்கப்பட்டபோது வெறும் 250 பேர்களுடனும், வருடத்துக்கு 2 கோடி ரூபா **Budget** உடன் தொடங்கிய '**RAW**', 1970 களில் வருட **Budget** 30 கோடி ரூபாவாகவும், வேலை செய்வர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களாகவும் உயர்ந்தது.

'**RAW**' அமைப்பு விஸ்தரிக்கப்பட்டபோது, அந்த அமைப்புக்குள்ளேயே வான்வெளியை உளவு பார்ப்பதற்காக - வேறு ஒரு உளவு இணைப்பான **ARC** யைக் கொண்டு வந்தது 1971 இல்.

(நாளை தொடரும்)

# பெத்தலகேம் நகரிலிருந்து இஸ்ரேலியப் படை வாபஸ்!



பள்ளிவாசல் தகர்ப்பை எதிர்த்தவர் கைது

(காஸா)

மத்திய கிழக்கு சமாதான முயற்சியின் ஒருகட்டமாக, பெத்தலகேமின் மேற்குக்கரையிலிருந்து இஸ்ரேலியப் படைகள் நேற்றுமுதல் வாபஸ்பெற ஆரம்பித்துள்ளன. செவ்வாயன்று நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன பிரதமர்களிடையேயான பேச்சுக்களைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் படைகள் வாபஸான பகுதிகளில் - பாதுகாப்புப் பொறுப்பை பலஸ்தீனப் பொலிஸார் ஏற்றுள்ளனர். 2000 ஆம் ஆண்டு செப்டம்பரில் பலஸ்தீனக் கிளர்ச்சி நடைபெற்றபோது, இப்பகுதிகளை இஸ்ரேலியப்படைகள் ஆக்கிரமித்திருந்தன. கடந்த ஞாயிறன்று பிரதான பலஸ்தீனப் போராளி அமைப்பு, யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து - காஸா பகுதியிலிருந்தும் இஸ்ரேல் படையினர் வெளியேறியிருந்தனர்.


இதேவேளை - நஸ்ரத்திலுள்ள மத்தியகிழக்கின் மிகப்பெரும் கிறிஸ்தவ தேவாலயம் அருகே அமைக்கப்பட்டு வந்த பள்ளிவாசல் ஒன்றின் அத்திவாரம் முழுவதையும், இஸ்ரேலியப் படையினர் முழுமையாக கனரக வாகனங்கள் மூலம் கிளறி எறிந்துள்ளனர். சியாஹப்-அல்-டின் என்ற பெயரில் அமைக்கப்பட்டுவரும் இந்தப் பள்ளிவாசல், உரிய கட்டுமான அனுமதியைப் பெறாமல் நிர்மாணிக்கப்படுவதால், அதை அழிக்க இஸ்ரேலிய நீதிமன்று கடந்த மார்ச் மாதத்தில் உத்தரவிட்டிருந்தது.

இப்பகுதியில் நேற்று அதிகாலை புல்டோசர்கள் சகிதம் நுழைந்த இஸ்ரேலியப் படைகள் - அத்திவாரப் பகுதியைக் கிளறி எறிந்தனர். இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பல பலஸ்தீனர்கள் கைதாகியுள்ளனர்.



மேற்குக்கரை நகரான பெத்தலகேமிலிருந்து, இஸ்ரேலியப் படைகள் வெளியேறுவதைத் தொடர்ந்து - அந்நகரின் பாதுகாப்பைப் பொறுப்பேற்கத் தயாராகும் பலஸ்தீனிய விசேட படையினர்.

# பிரிட்டிஷ் படையினர் வல்லுறவு; கென்யப் பெண்கள் முறையீடு!



மராய் பழங்குடி இனப் பெண்.

பிரிட்டிஷ் படையினர் தம்மைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியதாக, நூற்றுக்கணக்கான கென்யப் பெண்கள் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து - அவர்களுக்கான சட்ட உதவிகளை வழங்கப் பிரிட்டன் முன்வந்துள்ளது.

1983 முதல் கடந்த ஆண்டு வரை கென்யாவில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் படைகளால், தாம் அடிக்கடி, கூட்டாகப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாக இவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இப்பெண்களில் அநேகமானோர் மராய் பழங்குடி இனத்தவர்கள்.

கென்ய மலைப்பகுதியில், பிரிட்டிஷ் இராணுவம் பயிற்சித் தளம் ஒன்றைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட பெண்களில் சுமார் 100 பேர் தமக்கு ஏற்பட்ட அவலம் குறித்த சான்றுகளாக பொலிஸ் பதிவுகளையும், வைத்திய அறிக்கைகளையும் பகிரங்கப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவங்களால் சுமார் 40 கலப்பினக் குழந்தைகளும் பிறந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# அமெரிக்காவின் கூட்டுப்படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறாது!

## அமெரிக்க - பிரிட்டிஷ் தலைவர்கள் அறிவிப்பு

(வொஷிங்ரன்)

தமது படைகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டாலும் - ஈராக்கை விட்டு வெளியேறப்போவதில்லை என அமெரிக்காவும், பிரிட்டனும் வலியுறுத்தியுள்ளன.

சதாமின் அடிமட்ட வேர்களைக் களைந்து எறியும்வரை, அங்கு எமக்கு வேலைகள் உண்டென - அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், பிரிட்டிஷ் வெளியுறவுச்செயலர் ஜக்ஸ்ரோவும் தெரிவித்துள்ளனர். கடந்த செவ்வாயன்று, பக்தாத்தில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில், ஆறு அமெரிக்கப் படையினர் பலியான சம்பவம் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.



மே மாதம் ஈராக்கில் போர் முடிவடைந்துவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி அறிவித்த பின்னர், இதுவரை சுமார் 20 அமெரிக்கப் படையினர் கெரில்லா முறையிலான தாக்குதல்களினால் அங்கு பலியாகியுள்ளனர்.

இதேவேளை - அமெரிக்காவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், பெரும்பாலான அமெரிக்கர்கள், ஈராக்கில் அமெரிக்கா எதையும் சாதித்துவிடவில்லை எனத் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஈராக்கில் அமெரிக்கப் படைகள் பெரிதாக சாதிக்கவில்லை என்று கூறுவோர் தொகை, ஆரம்பத்தில் 56 சதவீதமாக இருந்தது. இப்போது இத்தொகை 86 சதவீதமாக உயர்ந்துள்ளது.

முன்னதாக - ஈராக்கிலுள்ள 230,000 அமெரிக்கப்படைகளும் அங்கு ஒருபோதும் தேவையற்ற வகையில் தங்கியிருக்கமாட்டார்கள் என அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியிருந்தார்.

உலகவலம்

### உற்பத்தி குறைப்பு



அமெரிக்காவில் உடல்பருமனானவர்களின் தொகை அதிகரிப்பதால், கொழுப்பு மற்றும் இனிப்பு வகைகளை உற்பத்தி செய்யும் பல உணவு நிறுவனங்கள்- தமது உற்பத்தி அளவை குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கிராப்ட் பூட் மற்றும் கொக்க கோலா, பெப்சி நிறுவனங்கள் இந்த உற்பத்திக் குறைப்பைச் செய்கின்றன. இவற்றுக்கு எதிராக சில இடங்களில் பாவனையாளர்களால் வழக்குகள் தாக்கலாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆந்திரா ரயில் விபத்தில் 18 பொதுமக்கள் மரணம்



தென்னிந்திய மாநிலமான ஆந்திரப்பிரதேசத்தில், நேற்று நடைபெற்ற ரயில் விபத்தில் 18 பேர் பலியாகினர். 25 பேர் காயமடைந்தனர். பாலத்திலிருந்து கீழேயிருந்த வீதியில் ரயில் வீழ்ந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

வாரங்கல் பகுதியில் நடைபெற்ற இந்த விபத்தில் - ரயில் என்ஜினும், இரண்டு பெட்டிகளும் பாலத்தை விட்டு விலகி, கீழே வீதியில் வீழ்ந்தன. இறந்தவர்களில் ஆறுபேர் ரயில் பயணிகள், ஏனையோர் ரயில்வே பாலத்திற்குக் கீழாகப் பயணித்துக்கொண்டிருந்தவர்களாவர். ரயில் பிறேக் கருவிகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. விபத்து நடைபெற்ற பகுதியில் பல பெட்டிகள் பாலத்திலிருந்து தொங்கிய நிலையில் காணப்பட்டன.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

31/23, சபாபதி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் நான்கு பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. மேலேயுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். (403)

நிரஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த

மிஸ்ரர்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE BOUN IDENTITY

(சி-974)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை

10.30, 2.30, 6.30

நெஞ்சோடு பேசும் நிலா இசை

அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக ஒரே இரவில் இரு மாபெரும் இசை நிகழ்ச்சிகள்.

INKARAN MUSICAL GROUP

நம் தேசக் கலைஞர்கள் பங்குபற்றும்

ஐங்கரன் இசைக்குழு

மினி மகாலிங்கம் அவர்களின் நெறிப்படுத்தலில் நம் தேசக் கலைஞர்கள் வழங்கும் நவீன ஒலி, ஒளி தொழில்நுட்பத்துடனான இசை இரவு.

SITHARA MUSICAL GROUP

பிரபல முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து வழங்கும்

சித்தாரா இசைக்குழு

நவீன மேடை அமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒளி அமைப்புக் காட்சிகளும், சிலிர்க்க வைக்கும் இசை அமைப்புடன் கூடிய பிரபல சித்தாரா இசைக் குழுவினரின் இசை இரவு.

இடம்: யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்.

காலம்: 11.07.2003 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி

அனைவரும் திரண்டுவந்து அன்புடன் ஆதரவு தருவீர்!

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினர்.

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈ.பி.டி.பியின் பிரசுரங்களை அவர்கள் முன் எரித்த மக்கள்

## வவுனியா நகரில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா நகரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஈ.பி.டி.பியினர் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தை, மக்கள் அவர்கள் முன்னிலையிலேயே தீமூட்டி எரித்தனர்.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் நகரின் மையப்பகுதியில்-வர்த்தக நிலையம் மற்றும் அங்கு கூடியிருந்த மக்களிடம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான துண்டுப்பிரசுரத்தை விநியோகித்துக் கொண்டிருந்தனர். இதன்போது, அங்கு திரண்டிருந்த மக்கள் - அவர்கள் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தை, அவர்கள் முன்னிலையில் எரித்தனர். இதனால் - மக்களுக்கும், ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, உடனடியாக யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு முறையிடப்பட்டதை அடுத்து, கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று, விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. (03)

### இலங்கை...

வடக்கு - கிழக்கு அபிவிருத்தியிலும், சமாதானப் பேச்சுக்களிலும் இந்தியா கவனம் செலுத்தவேண்டும் என்று, டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்ததாக நெல்சன் எதிரிசிங்க தெரிவித்தார்.

அத்துடன் - இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் வழங்கினால், அது தமிழகத்தில் அமைதியீனத்தை ஏற்படுத்தும் என, டக்ளஸ் தேவானந்தா, பிரஜேஷ் மிஸ்ராவிடம் தெரிவித்ததாகவும் எதிரிசிங்க மேலும் குறிப்பிட்டார்.

### புலனாய்வாளரை...

1992 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி, 2000 ஆம் ஆண்டுவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய, விநாயகர் வீதி, வீச்சுக் கல்முனையைச் சேர்ந்த வி.புண்ணியமூர்த்தி என்பவரே காணாமறபோயிருப்பதாக, அவரது மனைவி சசிகலா புண்ணியமூர்த்தி முறைப்பாடு செய்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சவூதி சென்று அண்மையில் திரும்பி வந்த இவர் மேசன் வேலைகளைச் செய்து, குடும்பத்தைக் கவனித்து வந்ததாகவும், ஜுன் 23 ஆம் திகதி காலை வேலைக்குச் சென்றவர் திரும்பிவரவில்லை என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டென்மார்க் வானொலி நிலையம் வடக்கில் அமைக்க நடவடிக்கை

வடபகுதியில் செயற்படக்கூடிய வகையில் புதிய வானொலி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டென்மார்க் அரசின் நேரடியான நெறிப்படுத்தலுடன், இயங்கவிருக்கும் மேற்படி வானொலி நிலையத்தினை வடபகுதியில் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக, டென்மார்க் அரசின் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளார்.

வன்னி உட்பட வடபகுதியின் அனைத்துப் பகுதிகளிலும் ஒலிபரப்பு சேவையை நடத்தக்கூடிய வகையில், மேற்படி வானொலி சேவை நடத்தப்படவுள்ளது.

இந்த வானொலி நிலையத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்காக வடபகுதியைச் சேர்ந்த உள்ளூர் பிரமுகர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றை உருவாக்குவதற்கான ஆரம்ப முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. (க)

### யாழ்.மாவட்ட...

இந்த வேலைக்கான கொடுப்பனவுக் காசோலைகளையும் இவரே பெற்றுக்கொண்டிருக்கிறார்.

இவற்றைவிட, அநேகமான செயற்திட்டங்கள் பூர்த்தியடையாத நிலையிலும், அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருக்கிறன.

சில செயற்திட்டங்களுக்கு - மதிப்பீட்டுத் தொகையைவிட மிக அதிகமான கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கிறது.

கட்டட நிர்மாணத்துக்கான ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான கொடுப்பனவும் செயயப்பட்டிருக்கிறது. ஆனால், கட்டடம் அமையவேண்டிய இடத்திலிருந்த பற்றைகளும், குப்பைகூழங்களும் அகற்றப்பட்டிருக்கிறதே தவிர, கட்டடம் எதுவும் கட்டப்படவில்லை. இவை போன்ற மோசடி பற்றிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது பற்றிய முழுமையான தகவல்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின்படி, தற்போதைய யாழ். அரச அதிபர் பத்மநாதன் - புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் அமைச்சின் செயலருக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதன் முழுமையான விபரம் இரண்டாம் பக்கத்தில் தரப்படுகிறது.

# கொழும்பில் சுற்றிவளைப்புகள் சாதாரண சட்டத்துக்குட்பட்டது

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் நடத்தப்பட்டுவரும் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் அனைத்தும் சாதாரண சட்டத்திற்குட்பட்டதாகவே மேற்கொள்ளப்பட்டுவருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் உள்ளபோதிலும், கைது செய்யப்படும் எவரும் அச்சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்றும்,

தெஹிவளையில் புலனாய்வு அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் உட்பட அனைத்து விசாரணைகளும், சாதாரண சட்டத்தின்படியே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார். (200)

# கரும்புலிகள் நாள் நினைவாக நெடுந்தீவில் விளையாட்டு விழா!

கரும்புலிகளின் நினைவுநாளை முன்னிட்டு, நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வு பரிசளிப்பு விழா, இன்று பி.ப.1.30 மணியளவில் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த பரிசளிப்பு விழாவில், முதன்மை விருந்தினராக - தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும், கௌரவ விருந்தினராக -யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன், நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்- விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், பிரதேச செயலர் பேரானந்தம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் - குதிரையோட்டம், தலையணைச்சண்டை, கயிறிழுத்தல், கைக்கொடிச்சவாரி மற்றும் நெடுந்தீவு அணிக்கும் வன்னி அணிக்கும் எதிரான உதைபந்தாட்டப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

# புலிகளை வலிந்து போருக்கு...

பார்வையாளனின் மனநிலையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உள்ளது. சிங்களத்தின் இந்த அரசியல் யதார்த்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அர்த்தமற்றதொன்றாக மாற்றிவருகின்றது.

இதேவேளை - போர் ஓய்வைக் கண்காணித்து, சமாதானச் சூழலை வளர்த்தெடுக்கும் இலக்குடன் பணியாற்ற வந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழுவினரும், படையினரின் போர்நிறுத்த மீறல்களை தடுத்து நிறுத்தும் திராணியற்றிருக்கின்றனர். எல்லாம் நடந்த பின்னர் பத்திரிகையாளர்களை சம்பவ இடத்திற்கு அழைத்து செய்தி கூறுவது போல், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களை, சிங்களப் படைகள் நடாத்துகின்றனர்.

கடலில் சிங்களப் படைகள் அடுத்தடுத்து நடாத்திவரும் அடாவடித்தனங்கள், புலிகளது பொறுமையை அளவுக்கதிகமாகச் சோதித்து விட்டன. சர்வதேசக் கடல் வழியே பொருட்களை ஏற்றிச்செல்லும் புலிகளின் கப்பல்களை வழிமறித்துத் தாக்கி மூழ்கடித்துவிட்டு, அவை ஆயுதங்களுடன் சிறிலங்காக் கடற்பரப்புக்குள் நுழைந்தன என்று, புலிகள் இயக்கம் மீது பழிசுமத்துகின்றன.

புலிகளின் கடற்கலங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால், கண்காணிப்புக்குழுவினரை அழைத்து அவர்கள் கண்முன்னால் சிங்களக் கடற்படை தனது சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளலாம் என்று திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்டது. ஆயினும், சிங்களக் கடற்படை எதேச்சாதிகாரமாக தொடர்ந்தும் புலிகளின் கப்பல்களைத் தாக்கிவருகின்றது. சர்வதேச கடற்பரப்பில் இரண்டு கப்பல்களை - அதன் மாலுமிகளுடனும், பொருட்களுடனும் தாக்கி மூழ்கடித்துள்ளது.

நெடுந்தீவுக் கடலில் கடற்படகொன்றின் அழிவிற்கும் மூன்று கடற்புலி வீரர்களதும் சாவுக்குக் காரணமாக சிங்களக் கடற்படை இருந்துள்ளது. அத்துடன் வடக்கு - கிழக்கு கரையோர மக்களின் தொழிலிற்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்டு - அவர்களின் சொத்துக்களை அழித்தும், அப்பட்டமான போர் நிறுத்த மீறல்களையும் அது செய்து வருகின்றது.

இதுபோல, சிங்கள இராணுவமும் தமிழர் தாயகப் பகுதியெங்கும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. உடன்பாட்டிற்கு முரணாக ரோந்துகளை, வீதிச் சோதனைகளை மேற்கொண்டும், காவல் அரண்களை, இராணுவ தங்ககங்களை புதிதுபுதிதாக அமைத்தும், போர்நிறுத்த உடன்படிக்கையை கேலிக்கிடமாக்கி வருகின்றன.

படையினரின் கட்டுபாட்டிலுள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களைச் சுற்றிவளைப்பதும், உள்நுழைந்து சோதனையிட முயல்வதும் அப்பட்டமான போர்நிறுத்த மீறல்களாகும். அதேபோல, படையினரின் போர்நிறுத்த மீறல்களை அந்தஅந்த இடங்களிலேயே கண்டித்து, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் மக்களை, சிங்கள இராணுவம் பயமுறுத்தியும், சிலசமயங்களில் தாக்கியும் வருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலும், திருமலை மாவட்டத்திலும் படையினர் செய்த படுகொலைகள் அனைவரும் அறிந்ததே. மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த போராளி ஒருவரைக் கைதுசெய்து, சிங்கள நீதிமன்றில் தடுத்து நிறுத்தி வைத்துள்ளனர். சிங்கள வான்படையின் வேவு விமானங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பறந்து, வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, ஒப்பந்த மீறல்களைப் புரிந்து வருகின்றன.

இவ்விதம், சிங்கள அரசின் முப்படைகளும், பாரபட்சமின்றி போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு, அமைதிப் பேச்சை சீர்குலைத்து வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்த முடியாமலும், விரும்பாமலும் சிங்கள அரசாங்கம் உள்ளது. இந்நிலையில், சமாதான முயற்சி என்பது சிங்கள தரப்பால் கைவிடப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது எனவும், விடுதலைப் புலிகள் ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கிற்கு அமைதிப்படை...

தோன்றியுள்ளதுடன், மீண்டும் போருக்குப் போகமாட்டோம் என்ற உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் தந்துள்ளதால், இராணுவத்தை இத்தகைய தேவைகளுக்கு அனுப்ப அரசு உத்தேசித்துள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சென்ற மாத இறுதியில் இந்தியா சென்ற அமெரிக்க பிரதிநிதிகள், அந்நாட்டின் அமைதிப்படையை ஈராக்கிற்கு அனுப்புவது குறித்த வேண்டுகோளொன்றை விடுத்திருந்தார்கள். இது குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே, வெளிநாட்டு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ இவ்வாறு தெரிவித்தார்.


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பண்ணை மீன்சந்தையை குத்தகைக்கு வழங்குவதற்கான
## மீள் கேள்வி அறிவித்தல்-2003

யாழ்.பண்ணையில் அமைந்துள்ள மீன் சந்தையை 21.07.2003 ஆம் திகதி முதல் 31.12.2003 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரக் கட்டணம் | - ரூபா 300.00 (வற் உட்பட) |
| கேள்விப் பிணைப்பணம் | - ரூபா 5000.00 (மீளளிக்கக்கூடியது) |
| ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை | - ரூபா 898676.00 (வற் நீங்கலாக) |
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித்திகதி | - 15.07.2003 (பி.ப 3.00 மணிவரை) |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | - 16.07.2003 (பி.ப 1.00 மணிவரை) |
| கேள்விகள் திறக்கும் திகதி | - 16.07.2003 (பி.ப.2.30 மணி) |

கேள்வியில் சித்திபெறுபவர், முழுத்தொகையையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை யாழ்.மாநகர சபையில் அறிந்து கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-1153)



## வட இலங்கையில் முதன் முதலாக சீவல் ஐஸ் (FLAKE ICE) அறிமுகம்

மீன், இறால் போன்ற கடல் உணவுகளைச் சர்வதேச தரத்துக்கு ஏற்றமுறையில் குளிர் பதனிட மேற்கத்தேய நாடுகளில் பாவிக்கப்படும் சீவல் ஐஸ் இப்போது யாழ். நகரில் எம்மால் உற்பத்திசெய்து வழங்கப்படுகிறது.

சிறப்பு நன்மைகள்

அ. சீவல் ஐஸ் உருவத்திலேயே சீவல் வடிவில் தயாரிக்கப்படுவதால், மிக நீண்டநேரம் உருகாத தன்மை பெற்றுள்ளது.

ஆ. சீவல் ஐஸ் கூரிய முனைகளற்றதால் மீன், இறால், கணவாய் போன்ற கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்புகளை குத்தி சேதப்படுத்தாது அவற்றின் உயிரியல் நிலையிலேயே பேணும் வல்லமை உள்ளது.

இ. சீவல் ஐஸ் சீரான வடிவுள்ளதால் கடலுணவுகளை குளிர் பதனிடும்போது, அவற்றின் கூரிய மேற்பரப்பில் அது பரந்து வியாபித்திருந்து, கடலுணவுகளை சர்வதேச தரத்துக்கேற்ப குளிரூட்டி நீண்டநேரம் பாதுகாக்கின்றது.

ஈ. கடலுணவுகளின் மென்மையான மேற்பரப்பு சேதமடையாமல் பேணப்படுவதால், ஏற்றுமதி சந்தையில் சீவல் ஐஸ் பாவித்து குளிரூட்டிய கடலுணவுகளுக்கு அதி கூடிய விலை கிடைப்பதன் மூலம் கூடிய இலாம் ஈட்டலாம்.

உ. பழைமை முறைப்படி ஐஸ் கட்டிகளை உடைத்து பாவிப்பதைவிட, சீவல் ஐஸ் பாவிப்பதன்மூலம் ஐஸ் செலவினத்தை 20% தொடக்கம் 25% வீதத்தால் குறைக்கலாம்.

புறோமோட்டர்ஸ் எஞ்சினியரிங் கம்பனி லிமிடெட்

தலைமை அலுவலகம்:
*844, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொ.இல.: 222 - 5780*

பனிக்கட்டி ஆலை:
*651/2 கடற்கரை வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*

(சி-1152)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.